## அரச நிதி

### பொதுவான போக்குகள்

தொடர்ந்து ஏற்படும் பெருமளவு இறைப் பற்றாக்குறையினைக் குறைப்பதற்கானதொரு பெரும் சீராக்க முயற்சியினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 1992 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட வெளிப்படுத்துகை 1991 இனை விடக் குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றத்தினைக் காட்டியது. அரசிறை/மொ.உ. உற்பத்தி விகிதம் 1991 இன் 20.4 சதவீதத்திலிருந்து 1992 இல் 20.3 சதவீதத்திற்குக் குறைவடைந்தமையின் காரணமாகப் பொதுவான அரசிறை முயற்சி சிறிதளவு பலவீனப்பட்டபோதும் மொ.உ. உற்பத்தியில் நடைமுறைச் செலவினம் 22.5 சதவீதத்திலிருந்து 21.0 சதவீதத்திற்குப் பெருமளவில் வீழ்ச்சியடைந்தமையானது மொ.உ.உ. இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் 2.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் 0.6 சதவீதமாகக் குறைவதற்குத் தூண்டுதலாக அமைந்தது. மேலும், அரச முதலீடு 1991 இன் மொ.உ. உற்பத்தியில் 8.7 சதவீதத்திலிருந்து 1992 இல் 8.0 சதவீதத்திற்குக் குறைவடைந்தமையுடன், தனியார்மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்தான உயர்ந்த பெறுகைகளும் சேர்ந்து மொத்தச் செலவினம்/மொ.உ. உற்பத்தி விகிதத்தினை முன்னைய ஆண்டின் 32.1 சதவீதத்திற்கெதிராக 1992 இல் 27.8 சதவீதத்திற்கு மட்டுப்படுத்துவதற்கு உதவின. இதன்படி 1992 இல் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள் 1991 இன் 11.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ. உற்பத்தியில் 7.4 சதவீதங் கொண்ட குறைந்த மொத்தப் பற்றாக்குறையை விளைவித்தன. இது வலுவான பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்குப் பெரும் பங்களிப்பாக இருந்தது.

1992 இல் இறை அபிவிருத்திகளில் காணப்பட்ட வரவேற்கத்தக்க பண்புயாதெனில் உள்நாட்டுக் கடன்பாடுகள் மொ.உ. உற்பத்தியில் 3.7 சதவீதத்திற்கு பெரும்பாலும் 1 சதவீதப் புள்ளியினால் மேலும் குறைவடைந்தமையும் அத்தகைய கடன்பாடுகள் வங்கியல்லா மூலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையுமேயாகும். குறைவான உள்நாட்டுக் கடன்பாட்டுத் தேவைகள் இவ்வாண்டில் மத்திய வங்கியையும் அதன் திறைசேரி உண்டியல் உடைமைகளைத் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாகக் குறைத்துக்கொள்வதற்கு வசதியளித்தது. இதன்படி, 1992 இல் இறைத் தொழிற்பாடுகள் மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுடன் சேர்ந்து வங்கித்தொழில் முறையிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடனை ரூ. 23,210 இலட்சத்தினால் (மொ.உ. உற்பத்தியில் 0.5 சதவீதம்) குறைவடையத் தூண்டியது.

### இறைச் செயலாற்றம்

1992 இல் அரசின் அரசிறை ரூ. 861,180 இலட்சமாக விளங்கி 1991 இனைவிட 13 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. எனினும் பொதுவான அரசிறை வளர்ச்சி பெயரளவு மொ.உ. உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பினை விடப் பின்தங்கியிருந்தமைக்கு அரசிறை/மொ.உ. உற்பத்தி விகிதம் 1991 இன் 20.4 சதவீதத்திலிருந்து 1992 இல் 20.3 சதவீதத்திற்குக் குறைவடைந்தமையே காரணமாகும். பாதுகாப்பு வரி விதிக்கப்பட்டமை, கலால் வரி விரிவாக்கப்பட்டமை, வருமான வரிகள், இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனவு வரிகள் என்பனவற்றிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் உயர்வடைந்தமை என்பனவற்றின் மூலமாக மேலதிக அரசிறை முயற்சி மேற்கொள்ளப்பட்டபோதும் வரி

அரசிறை/மொ.உ. உற்பத்தி விகிதம் 1991 இன் 18.3 சதவீதத்திலிருந்து 1992 இல் 18.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்குப் புகையிலை மீதான கலால் வரியிலேற்பட்ட பெருமளவு வீழ்ச்சி, தயாரிப்பு மீதான மொத்த விற்பனை வரியிலேற்பட்ட சோர்வுற்ற வளர்ச்சி, ஏற்றுமதி வரிகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றமை என்பனவே காரணங்களாக இருந்தன.

அதேவேளை, 1992 இல் நடைமுறைச் செலவினம் ரூ. 887,260 இலட்ச மாக விளங்கி 1991 இன் 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 6 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைக் காட்டியது. இதன்படி நடைமுறைச் செலவினம்/ மொ.உ. உற்பத்தி விகிதம் 22.5 சதவீதத்திலிருந்து 21.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ரூ. 178,660 இலட்சம் கொண்ட (மொ.உ.உ. இல் 4.2 சதவீதம்) உயர்ந்தளவு பாதுகாப்புச் செலவினம் காணப்பட்டபோதும் பொருட் கள் மற்றும் பணிகளின் கொள்வனவு மீதான மொத்த நடைமுறைச் செலவினம் ரூ. 391,350 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 19 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் 9 சதவீத வளர்ச்சியை மட்டும் பதிவு செய்தது. இதனால் மொ.உ. உற்பத்தியுடன் தொடர்பான இச்செலவினங்கள் 1991 இன் 9.6 சதவீதத்திலிருந்து 1992 இல் 9.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மேலும் மாற்றல் கொடுப்பனவுகள் 1991 இன் ரூ. 258,350 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 243,080 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு ஓய்வூதியத்திலும் அகதிகளுக்கான செலவினத்திலும் ஏற்பட்ட குறைப்பே காரணமாகும். இதன்படி மொ.உ. உற்பத்தியுடன் தொடர்பான மொத்த நடைமுறை மாற்றல்கள் 1991 இன் 7 சதவீதத்திலிருந்து 1992 இல் 5.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

நடைமுறைச் செலவினக்கூறில் காணப்பட்ட சாதகமான போக்குகளை வலியுறுத்துகின்ற விதத்தில், வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்குத் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ. 75,770 இலட்சம் (மொ.உ. உற்பத்தி யில் 2 சதவீதம்) கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 1992 இல் ரூ. 26,030 இலட்சம் கொண்ட (மொ.உ. உற்பத்தியில் 0.6 சதவீதம்) குறிப் பிடத்தக்களவிற்குக் குறைவான பற்றாக்குறையினை உருவாக்கின. அதேவேளை அரச தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கல் உட்பட மூலதனச் செலவினம் ரூ. 340,270 இலட்சமாக விளங்கி 1991 இனைவிட 4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது. எனினும், அரச முதலீடு/மொ.உ.உ. விகிதம் 8.7 சதவீதத்திலிருந்து 1992 இல் 8.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதே நேரம், தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்தான உயர்ந்த பெறுகைகள், அரசுக்கான அரச கூட்டுத்தாபனங்களின் கடன் மீள் கொடுப்பனவு களின் பேரிலான உயர்ந்த பெறுகைகள் என்பன மொத்தச் செலவினத்தையும் தேறிய கடன் வழங்கலையும் 1991 இன் மொ.உ. உற்பத்தியில் 32.1 சதவீதத்தி லிருந்து 1992 இன் மொ.உ. உற்பத்தியில் 27.8 சதவீதத்திற்குக் குறைவடையத் தூண்டின.

1992 இல் இறைத் தொழிற்பாடுகள் ரூ. 315,090 இலட்சம் (மொ.உ.உ. இல் 7.4 சதவீதம்) கொண்ட பொதுவான வரவு செலவுத்திட்டக் குறையை (கொடைகளுக்கு முன்) விளைவித்ததுடன் இது 1991 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 433,480 இலட்சம் (மொ.உ. உற்பத்தியில் 11.6 சதவீதம்) கொண்ட பற்றாக்குறையைவிடக் குறிப்பிடத்தக்களவு குறைவானதாகும். ரூ. 82,800 இலட்சம் கொண்ட வெளிநாட்டுக் கொடைகள் பயன்படுத்தப்பட்டமையால் (மொ.உ. உற்பத்தியில் 2.0 சதவீதம்) வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை (கொடைகளின் பின்னர்) 1991 இன் ரூ. 354,780 இலட்சத்திலிருந்து (மொ.உ. உற்பத்தியில் 9.5 சதவீதம்) 1992 இல் ரூ. 232,290 இலட்சத்திற்கு (மொ.உ. உற்பத்தியில் 5.4 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. அதேவேளை வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்கான தேறிய வெளிநாட்டுக் கடன்களின் பயன்பாடு ரூ. 193,290 இலட்சத்திலிருந்து (மொ.உ. உற்பத்தியில் 5.2 சதவீதம்), ரூ. 79,840 இலட்சத்திற்கு (மொ.உ. உற்பத்தியில் 1.9 சதவீதம்) வீழ்ச்சி யடைந்தமைக்கு 1992 இல் நிகழ்ச்சித் திட்டக் கடன்களின் குறைந்த அளவே காரணமாகும். எனினும், நடைமுறைக் கணக்குத் தொழிற்பாடுகளின் திருந்திய செயலாற்றமானது தனியார்மயமாக்கல் மூலம் கிடைத்த உயர்ந்த பெறுகைகளின் காரணமாக குறைவடைந்த மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் என்பனவற்றுடன் இணைந்து தேறிய உள்நாட்டுக் கடன்பாடுகளை 1991 இன் ரூ. 161,480 இலட்சத்துடன் (மொ.உ. உற்பத்தியில் 4.3 சதவீதம்) ஒப்பிடுகை யில் 1992 இல் ரூ. 152,460 இலட்சத்தில் (மொ.உ. உற்பத்தியில் 3.6 சதவீதம்) மட்டுப்படுத்துவதற்கு அரசினை இயலச் செய்தது. வங்கித்தொழில் முறையி லிருந்தான மூலவளங்களைப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடித்து உள்நாட்டுக் கடன்பாடுகள் பெரும்பாலும் தனியே வங்கியல்லா மூலங்களிலிருந்தே பெறப்பட்டன. 1988–1992 காலப் பகுதியில் அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பினை அட்டவணை 1.50 தரு கின்றது.

**அரசிறை**

1992 இல் அரசின் அரசிறை ரூ. 861,180 இலட்சமாக விளங்கி 1991 இன் 12 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 13 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மொத்த வரி அரசிறை ரூ. 766,920 இலட்சமாகப் பெரும்பாலும் முன்னைய ஆண்டின் மட்டத்தில் விளங்கி மொத்த அரசிறையில் 89 சதவீதத்திற்கு வகை கூறியது. பொருட்கள் மற்றும் பணிகள் மீதான உள்நாட்டு வரிகள் இவ்வாண்டுக் காலத்தில் தொடர்ந்தும் விரிவடைந்ததுடன் 1991 இன் 47 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த அரசிறையில் 51 சதவீதத்தினை உருவாக் கியது.அரசிறையில் இம்மூலத்தின் அதிகரித்த முக்கியத்துவத்திற்கு 1992 இல் பாதுகாப்பு வரி விதிக்கப்பட்டமை, கலால் வரி விதிப்பின்கீழ் உள்ளடக்கப்பட்ட உற்பத்திகள் அதிகரித்தமை என்பனவே காரணங்களாகும். அதேவேளை இறக்கு மதித் தீர்வைகள் மூலமாகப் பெறப்பட்ட வரிகள் மொத்த அரசிறையில் 1991 இனைப் போன்று 27 சதவீதத்தினைக் கொண்டிருந்தன. அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட கீழ்நோக்கிய போக்கினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் ஏற்றுமதி வரிகளின் பங்கு 1992 இன் மொத்த வரி அரசிறையில் 1.1 சதவீதத் திற்கு வீழ்ச்சியடைந்தது. வரி வீதத்தில் குறைப்புக் காணப்பட்டபோதிலும் வருமானவரியின் பங்கு 1991 இன் 14.3 சதவீதத்திலிருந்து 1992 இல் 15.1 சதவீதத்திற்கு முன்னேற்றம் கண்டது.

அட்டவணை 1.50

## அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1992 தற்காலிகம் | 1993 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... | 48,337 | 60,386 | 74,661 | 84,049 | 93,719 | 94,398 | 110,927 |
| மொத்த அரசிறை ... | 41,749 | 53,979 | 67,964 | 76,179 | 84,999 | 86,118 | 101,977 |
| வரி அரசிறை ... | 35,946 | 47,513 | 61,206 | 68,157 | 76,591 | 76,692 | 94,377 |
| வரியல்லா அரசிறை ... | 5,803 | 6,466 | 6,758 | 8,022 | 8,408 | 9,425 | 7,600 |
| கொடைகள் ... | 6,588 | 6,407 | 6,697 | 7,870 | 8,720 | 8,280 | 8,950 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... | 76,532 | 82,164 | 99,814 | 119,527 | 124,010 | 117,627 | 141,916 |
| நடைமுறை ... | 46,132 | 56,884 | 71,771 | 83,756 | 84,327 | 88,726 | 97,437 |
| மூலதன ... | 22,878 | 20,750 | 19,161 | 25,968 | 34,475 | 28,540 | 37,271 |
| மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் ... | 7,522 | 4,530 | 8,882 | 9,803 | 5,208 | 361 | 7,209 |
| நடைமுறைக் கணக்குமிகை/குறை (—) ... | — 4,383 | — 2,905 | — 3,807 | — 7,577 | 672 | — 2,608 | 4,540 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) ... | — 34,783 | — 28,185 | — 31,850 | — 43,348 | — 39,011 | — 31,509 | — 39,939 |
| வரவுசெலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) ... | — 28,195 | — 21,778 | — 25,153 | — 35,478 | — 30,291 | — 23,229 | — 30,989 |
| நிதியிடல் ... | 28,193 | 21,777 | 25,153 | 35,478 | 30,290 | 23,230 | 30,989 |
| வெளிநாட்டுக் கடன்பாடு ... | 7,128 | 5,926 | 11,644 | 19,329 | 20,793 | 7,984 | 19,489 |
| உள்நாட்டுக் கடன்பாடு ... | 21,065 | — 12,373 | 16,986 | 16,148 | 9,497 | 15,246 | 11,500 |
| சந்தையல்லாக் கடன்பாடு ... | 1,685 | 1,822 | 3,538 | 1,667 | — | 1,857 | — |
| சந்தைக்கடன்பாடு ... | 19,380 | 10,551 | 13,448 | 14,481 | 9,497 | 13,389 | 11,500 |
| வங்கியல்லா ... | 10,178 | 11,084 | 13,190 | 14,447 | 9,497 | 15,710 | 13,000 |
| வங்கி ... | 9,202 | — 553 | 258 | 34 | — | — 2,321 | — 1,500 |
| நிலுவைகளிலுள்ள அதிகரிப்பு (+) / வீழ்ச்சி (—) | — | 3,478 | — 3,478 | — | — | — | — |

(தொடரும்)

## அட்டவணை 1.50


(தொடர்ச்சி)

### அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு (மொ. உ. உ. இன் சதவீதமாக)

| விடயம் | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1992 தற்காலிகம் | 1993 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... ... | 21.8 | 24.0 | 23.2 | 22.6 | 21.2 | 22.3 | 22.4 |
| மொத்த அரசிறை ... ... | 18.8 | 21.4 | 21.1 | 20.4 | 19.2 | 20.3 | 20.6 |
| வரி அரசிறை ... ... | 16.2 | 18.9 | 19.0 | 18.3 | 17.3 | 18.1 | 19.1 |
| வரியல்லா அரசிறை ... ... | 2.6 | 2.6 | 2.1 | 2.2 | 1.9 | 2.2 | 1.5 |
| கொடைகள் ... ... | 3.0 | 2.5 | 2.1 | 2.1 | 2.0 | 2.0 | 1.8 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... | 34.5 | 32.6 | 31.0 | 32.1 | 28.0 | 27.8 | 28.7 |
| நடைமுறை ... ... | 20.8 | 22.6 | 22.3 | 22.5 | 19.0 | 21.0 | 19.7 |
| மூலதன ... ... | 10.3 | 8.2 | 6.0 | 7.0 | 7.8 | 6.7 | 7.5 |
| மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் ... | 3.4 | 1.8 | 2.8 | 2.6 | 1.2 | 0.1 | 1.5 |
| நடைமுறைக் கணக்கு மிகை/குறை (—) ... | —2.0 | —1.2 | —1.2 | —2.0 | 0.2 | —0.6 | 0.9 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) ... | —15.7 | —11.2 | —9.9 | —11.6 | —8.8 | —7.4 | —8.1 |
| வரவுசெலவுத்திட்டக்குறை (கொடைகளுக்குப்பின்) ... | —12.7 | —8.6 | —7.8 | —9.5 | —6.8 | —5.5 | —6.3 |
| நிதியிடல் ... ... | 12.7 | 8.6 | 7.8 | 9.5 | 6.8 | 5.5 | 6.3 |
| வெளிநாட்டுக் கடன்பாடு ... ... | 3.2 | 2.4 | 3.6 | 5.2 | 4.7 | 1.9 | 3.9 |
| உள்நாட்டுக் கடன்பாடு ... ... | 9.5 | 4.9 | 5.2 | 4.3 | 2.1 | 3.6 | 2.3 |
| சந்தையல்லாக் கடன்பாடு ... | 0.8 | 0.7 | 1.1 | 0.3 | — | 0.4 | — |
| சந்தைக் கடன்பாடு ... ... | 8.7 | 4.2 | 4.1 | 4.0 | 2.1 | 3.2 | 2.3 |
| வங்கியல்லா ... ... | 4.6 | 4.4 | 4.1 | 4.0 | 2.1 | 3.7 | 2.6 |
| வங்கி ... ... | 4.2 | —0.2 | 0.1 | 0.0 | — | —0.5 | —0.3 |
| நிலுவைகளிலுள்ள அதிகரிப்பு (+) / வீழ்ச்சி (—) ... | — | 1.4 | —1.1 | — | — | — | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# இறை அளவுகளின் போக்குகள்




இலங்கை மத்திய வங்கி

வரியல்லா அரசிறை ரூ. 94,250 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 17 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. வட்டி வருவாய் 35 சதவீதத்தினால் உயர்வடைந்ததுடன் 1991 இன் 33 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் வரியல்லா அரசிறையில் 38 சதவீதத்திற்கு வகை கூறியது. இதே போன்று 1992 இல் மத்திய வங்கியின் இலாப மாற்றல் ரூ. 11,500 இலட்சமாக அமைந்து ரூ. 6,500 இலட்சத்தினால் உயர்வடைந்தது. அதே வேளை கைத்தொழில் அல்லா விற்பனைகள், நிருவாகக் கட்டணங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தும் கட்டணங்கள் என்பனவற்றிலிருந்தான அரசிறை 53 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலித்து வரியல்லா அரசிறையில் 27 சதவீதத்திற்கு வகை கூறியது.

**வரி அரசிறை**

மொத்த விற்பனவு வரிகள், கலால் தீர்வைகள், பாதுகாப்பு வரி என்பனவற்றை முக்கியமாக உள்ளடக்கிய பொருட்கள் பணிகள் மீதான உள்நாட்டு வரிகள் ரூ. 387,590 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 12 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1992 இல் 21 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பினைப் பதிவு செய்தன. 1992 சனவரியில் விதிக்கப்பட்ட 1 சதவீதமான பாதுகாப்பு வரி இதன் பின்னர் 1992 மேயில் 3 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டமையும் இவ்வாண்டில் மேலதிக அரசிறையை உயர்த்துவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்கள், வங்கித் தொழில் காப்புறுதி மற்றும் ஏனைய பணிகளின் மொத்த விற்பனை மீது விதிக்கப்பட்ட பாதுகாப்பு வரி ரூ. 37,440 இலட்ச வரிச் சேகரிப்பினை அல்லது 1992 இன் பொருட்கள் மற்றும் பணிகள் மீதான உள்நாட்டு வரியில் ஏறத்தாழ 10 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

மொத்த விற்பனை வரியிலிருந்தான அரசிறை ரூ. 243,790 இலட்சமாக அமைந்து 1992 இல் 14 சதவீதமான வளர்ச்சியைக் காட்டியமைக்கு இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனை வரி மிகக் கூடுதலாக உயர்வடைந்தமையே பெருமளவு காரணமாகும். எனினும் தயாரிப்பு மீதான மொத்த விற்பனை வரியின் பேரிலான வரிச் சேகரிப்பு ரூ. 82,330 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் மிகப் பெரும் அதிகரிப்பான 28 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் 4 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினை மட்டும் காட்டியது. தயாரிப்பு மொத்த விற்பனை வரியின் செயலாற்றம் மங்கலாகக் காணப்பட்டமைக்கு 1991 இனைவிட 2 சதவீதமான அதிகரிப்பினை மட்டும் பதிவுசெய்த உணவு, குடிபானம், புகையிலைத் துணை வகையிலிருந்தான் வரிச் சேகரிப்புக்கள் குறைவடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். பொதுவான இறக்குமதிகளில் ஏற்பட்ட 14 சதவீதமான வளர்ச்சி, இறக்குமதி வரிகளிலிருந்தான உயர்ந்த அரசிறைச் சேகரிப்புக்கள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனை வரியிலிருந்தான அரசிறை ரூ.126,000 இலட்சமாக அமைந்து 1991 இனைவிட 20 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. 1992 நவெம்பரில் பொதுவான மொத்த விற்பனை வரி வீதம் 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு அதிகரித்தமையும் மீளாய்விற்குரிய ஆண்டில் இம்மூலங்களிலிருந்தான அரசிறை அதிகரிப்பிற்கு உதவியது. அதேவேளை 1992 நவெம்பரில் நான்கு படிமுறை வீதங்களில் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட மொத்த விற்பனை வரி வீத அமைப்பு 1992 நவெம்பரில் 15 சதவீத வரிப் படிமுறை நீக்கப்பட்டதன் மூலம் மேலும் இலகுபடுத்தப்பட்டது. இதன் விளைவாக மிக

இன்றியமையாத விடயங்கள் 5 சதவீத, 10 சதவீத படிகளின் கீழ் பாகுபடுத்தப் பட்ட வேளையில் குடிவகை, புகையிலை, குடிபானம், பெற்றோல், நீண்டகாலப் பாவனைப் பொருட்கள் போன்ற அத்தியாவசியமல்லா விடயங்கள் 20 சதவீதம் கொண்ட பொது வீதத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன.

அதேவேளை, வங்கிகள் மீதான மொத்த விற்பனை வரி வீதம் 3 சதவீதத்தி லிருந்து 2 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டபோதும் தயாரிப்பல்லா நடவடிக்கை கள் மீதான மொத்த விற்பனை வரிகள் ரூ. 35,460 இலட்சமாக விளங்கி 1992 இல் 19 சதவீதம் கொண்ட மிகக் கூடியளவு அதிகரிப்பினைக் காட்டின. இதற்குத் தொலைத் தொடர்புப் பணிகள் மீதான மொத்த விற்பனை வரி வீதம் 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு மாறியமை ஓரளவும் துறைமுகம் மற்றும் மின்வலுப் பணிகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் முன்னேற்றம் கண்டமை ஓரளவும் காரணங்களாகும்.

1992 இல் கலால் வரிகளிலிருந்தான அரசிறை ரூ. 105,830 இலட்சமாக விளங்கி சிகரட், புகையிலை வரிகளின் பேரிலான குறைந்த பெறுகைகளின் விளைவாக அரசிறைச் சேகரிப்புக்கள் உண்மையான மந்த நிலையை அடைந்த மையைப் பிரதிபலித்தன. சிகரட்டுக்கள் மீதான கலால் தீர்வை 1992 பெப்புருவரி யில் சிகரட் ஒன்றிற்கு ரூ. 0.10 இனாலும், 1992 ஒற்றோபரில் மேலும் சிகரட் ஒன்றிற்கு ரூ. 0.50 இனாலும் அதிகரிக்கப்பட்டபோதிலும் இம்மூலத்திலிருந்தான அரசிறை 19 சதவீத வீழ்ச்சியைக் காட்டியமைக்கு விற்பனை அளவுகளில் ஏற்பட்ட குறைப்பு ஓரளவும் 1992 இல் நிலவிய வரட்சி நிலைமைகளின் விளை வாகப் பதனிடப்பட்ட புகையிலையின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமை ஓரளவும் காரணங்களாக இருந்தன. அதேவேளை குடிவகை மீதான கலால் தீர்வை வீதம் 1992 பெப்புருவரியில் போத்தலொன்றுக்கு ரூ. 5 இனாலும் 1992 யூலையில் மேலும் போத்தலொன்றுக்கு ரூ. 7 இனாலும் திருத்தப்பட்டமையைப் பிரதி பலிக்கின்ற விதத்தில் குடிவகை வரிகளிலிருந்தான அரசிறை ரூ. 38,030 இலட்ச மாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 22 சதவீதம் கொண்ட உயர்வினைப் பதிவு செய்தது. மேலும் 1992 பெப்புருவரியிலிருந்தும் கலால் சட்டத்தின் (சிறப்பு ஏற்பாடுகள்) கீழ் காற்றூட்டப்பட்ட நீர், சீமெந்து, ரயர் மற்றும் ரியூப், மின்துணைக் கருவிகள் போன்ற விடயங்களை உள்ளடக்கத்தக்க விதத்தில் உற் பத்திகளின் உள்ளடக்கம் விரிவாக்கப்பட்டதுடன் இம்மூலங்களிலிருந்தான அர சிறை இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்து 1992 இல் ரூ. 12,250 இலட்சத் தினை அடைந்தது.

முன்னைய ஆண்டினைப் போன்றே இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் வரியின் வடிவிலான பன்னாட்டு வர்த்தகம் சார்ந்த வரிகளிலிருந்தான அரசிறை 1992 இல் மொத்த வரி அரசிறைச் சேகரிப்பில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினைக் கொண்டிருந்தது. நான்கு படிமுறைகளைக் கொண்ட தீர்வை அமைப் பின் ஆண்டு முழுவதற்குமான தாக்கம் 1992 இல் உணரப்பட்டதுடன், இறக்கு மதித் தீர்வைச் சேகரிப்பு ரூ. 207,210 இலட்சமாக அமைந்து 1991 இனைவிட 11 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. எனவே நான்கு படிகளைக் கொண்ட தீர்வை அட்டவணையின்கீழ் சீராக்கங்கள் செய்யப்பட்டு, கோதுமை மற்றும் ஏனைய பல உற்பத்திகளுக்குத் தீர்வைத் தளர்த்தல்கள் வழங்கப்பட்டபோதும் இறக்குமதித் தீர்வைகளின் சராசரி நிகழ்வு 1991 இன் 14.7 சதவீதத்திலிருந்து 1992 இல் 14.3 சதவீதத்திற்கு மிகச் சிறிதளவால் மாத்திரம் வீழ்ச்சியடைந்தது.

ஏற்றுமதித் தீர்வைகள் தொடர்ச்சியாகக் குறைக்கப்பட்டமை, குறைந்த வெளியீடு, மந்தமான விலைகள் என்பனவற்றின் பின்னணியில், ஏற்றுமதி வரிகளி லிருந்தான அரசிறை ரூ. 8,170 இலட்சமாக விளங்கி, முன்னைய ஆண்டின் 55 சதவீதம் கொண்ட குறைப்புடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய ஆண்டில் 28 சதவீதம் கொண்ட மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டியது. தேயிலை மீதான பெறுமான விகித வரியிலிருந்தான அரசிறை, தேயிலை மீதான குறித்துரைக்கப் பட்ட தீர்வை என்பன ஒன்று சேர்ந்து ரூ. 3,580 இலட்சமாக விளங்கி 27 சத வீதமான வீழ்ச்சியைக் காட்டியதுடன் 1992 இன் மந்தமான விலைகள், குறை வான ஏற்றுமதி அளவு, குறைக்கப்பட்ட வரி வீதங்கள் என்பனவற்றின் இணைந்த தாக்கத்தினைப் பிரதிபலிப்பதாக இருந்தது. இதேபோன்று இறப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ. 3,170 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் அரசிறைச் சேகரிப்பான ரூ. 4,760 இலட்சத்தினைவிடக் குறைவாகக் காணப்பட்டமைக்கு வரியற்ற அடிமட்ட விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, வரி வீதங்களில் ஏற்பட்ட குறைப்பு, ஏற்றுமதி அளவு குறைவடைந் தமை என்பனவே காரணங்களாகும். அதேவேளை தேங்காயெண்ணெய்க்கான வரியற்ற அடிமட்ட விலைகள் அதிகரித்தமையுடன் உலர்த்தியதேங்காய், தேங்காய்த்துருவல் என்பன மீதான தீர்வை வீதங்கள் குறைக்கப்பட்டமையால் தெங்கு மீதான ஏற்றுமதித் தீர்வை ரூ. 1,170 இலட்சமாக அமைந்து 1991 இனை விட 8 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதனால் 1992 இல் ஏற்றுமதி வரிகளிலிருந்தான பொதுவான அரசிறை 1991 இனைவிட ஏறத்தாள 30 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. அதேவேளை அதிகரித்த உற்பத்தியாளர் இலாபங்கள் என்ற வடிவில் ஏற்றுமதியாளர்களுக்கு மேலுமொரு உந்துதலை வழங்கும் நோக்குடன் தேயிலைப் பெறுமான விகித விற்பனை வரி உட்பட ஏற்றுமதி வரிகளை 1992 திசெம்பரில் அரசு நீக்கிவிட்டது.

இலாப வரி வீதங்கள் குறைக்கப்பட்டமை, அடிமட்ட வருமானம் அதிகரிக் கப்பட்டமை, தொழில் வருமானத்தின்மீது உயர்ந்த வரி வரவுகள், தகுதிக் கொடுப்பனவுகள் புறக்கீடு செய்யப்பட்டமை போன்ற வருமான வரி விதிப்பில் தொடர்ச்சியாகச் செய்யப்பட்ட மறுசீரமைப்புக்களின் சூழ்நிலையில் 1992 இல் வருமான வரியிலிருந்தான அரசிறை ரூ. 115,610 இலட்சமாக விளங்கி, மொ.உ. உற்பத்தியின் பெயரளவு வளர்ச்சியுடன் இசைந்து செல்லும் வகையில் 19 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. வரியின் ஆகக்கூடிய எல்லை வீதம் 35 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமை, வரியற்ற அடிமட்ட வருமானம் ரூ. 42,000 இற்கு அதிகரித்தமை, தொழிலிலிருந்தான வருமானத்தின் மீதான வரி வரவாக ரூ. 1,800 கொண்ட உயர் ஒதுக்குகள் என்பன காணப்பட்டபோதும் 1992 இல் தனியார் வருமானவரிச் சேகரிப்பு ரூ. 44,540 இலட்சமாக விளங்கி 26 சதவீதங் கொண்ட வளர்ச்சியை எடுத்துக் காட்டியது. இதற்குத் தொழி லல்லா வருவாயிலிருந்தான அதிகரித்த அரசிறைச் சேகரிப்புக்களே முக்கிய காரண மாகும். வட்டி வருமானம் மீதான பிடித்து வைத்தல் வரி வீதம் 1991 இன் 20 சதவீதத்திலிருந்து 1992 இல் 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டபோதும் பிடித்து வைத்தல் வரி மிக உயர்வான சேகரிப்பினை உருவாக்கியமைக்கு வங்கித் தொழில் நிறுவனங்களின் சேமிப்புக்களும் நிலையான வைப்புக்களும் உறுதியாக அதிகரித்தமையே காரணமாகும். மேலும் 1992 ஏப்பிறலில் வரி வீதம் 5 சதவீதப் புள்ளியினால் 40 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டபோதும் கூட்டு வருமான

## அட்டவணை 1.51

## கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு

ரூபா பத்து இலட்சம்

| விடயம் | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1992 தற்காலிகம் | 1993 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| வரி அரசிறை ... ... | 35,946 | 47,513 | 61,206 | 68,157 | 76,591 | 76,692 | 94,377 |
| வருமானவரிகள் ... ... | 4,647 | 5,148 | 7,337 | 9,722 | 9,500 | 11,561 | 12,430 |
| தனியார் ... ... | 1,464 | 2,207 | 2,957 | 3,539 | 3,650 | 4,454 | 4,250 |
| கூட்டு ... ... | 3,183 | 2,941 | 4,380 | 6,183 | 5,850 | 7,107 | 8,180 |
| சொத்துக்கள் மீதான வரிகள் ... ... | 1,777 | 2,697 | 3,140 | 3,541 | 2,975 | 2,845 | 3,420 |
| மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரி ... | — | 2,345 | 2,618 | 3,033 | 2,430 | 1,991 | 1,440 |
| உள்நாட்டு பொருட்கள் பணிகள் மீதான வரிகள் ... ... | 17,021 | 20,828 | 28,770 | 32,107 | 39,191 | 38,759 | 52,257 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி ... | 12,321 | 14,658 | 20,291 | 21,430 | 25,270 | 24,379 | 31,865 |
| தயாரிப்பு ... ... | 3,610 | 4,496 | 6,798 | 7,945 | 9,840 | 8,233 | 11,275 |
| தயாரிப்பல்லாத ... ... | 3,386 | 3,004 | 3,726 | 2,974 | 2,930 | 3,546 | 3,470 |
| இறக்குமதிகள் ... ... | 5,325 | 7,158 | 9,767 | 10,511 | 12,500 | 12,600 | 17,120 |
| கலால் வரி ... ... | 4,420 | 5,812 | 8,170 | 10,597 | 12,000 | 10,583 | 14,730 |
| குடிவகை ... ... | 1,754 | 1,955 | 2,657 | 3,126 | 3,450 | 3,803 | 4,650 |
| புகையிலை ... ... | 2,665 | 3,855 | 5,461 | 6,884 | 7,900 | 5,555 | 8,410 |
| ஏனையவை ... ... | 1 | 2 | 52 | 587 | 650 | 1,225 | 1,670 |
| பாதுகாப்பு வரி ... ... | — | — | — | — | 1,900 | 3,744 | 5,622 |
| உரிமக்கட்டணங்கள் ... ... | 280 | 358 | 309 | 80 | 21 | 53 | 40 |
| பன்னாட்டுவர்த்தகத்தின் மீதான வரிகள் ... | 12,501 | 16,495 | 19,341 | 19,754 | 22,495 | 21,538 | 24,830 |
| இறக்குமதிகள் ... ... | 10,671 | 14,923 | 16,792 | 18,617 | 20,800 | 20,721 | 23,800 |
| ஏற்றுமதிகள் ... ... | 1,830 | 1,572 | 2,549 | 1,137 | 1,695 | 817 | 1,030 |
| தேயிலை ... ... | 872 | 628 | 1,601 | 492 | 880 | 358 | 596 |
| இதில் பெறுமான விகிதவரி ... ... | 264 | 355 | 1,311 | 298 | 700 | 224 | 516 |
| இறப்பர் ... ... | 842 | 766 | 747 | 476 | 700 | 317 | 365 |
| தெங்கு ... ... | 67 | 126 | 151 | 125 | 65 | 117 | 40 |
| ஏனைய ஏற்றுமதிகள் ... ... | 49 | 52 | 50 | 44 | .50 | 25 | 29 |
| வரியல்லா அரசிறை ... ... | 5,803 | 6,466 | 6,758 | 8,022 | 8,408 | 9,425 | 7,600 |
| சொத்து வருவாய் ... ... | 4,080 | 4,387 | 4,192 | 5,964 | 5,677 | 6,163 | 4,750 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் ... | 1,650 | 2,000 | 500 | 500 | 650 | 1,150 | 1,000 |
| வட்டிவருவாய் ... ... | 1,451 | 1,198 | 1,143 | 2,617 | 2,557 | 3,545 | 3,465 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை ... | 850 | 1,041 | 2,235 | 2,612 | 2,200 | 1,179 | — |
| கட்டணங்களும் விதிப்புக் கட்டணங்களும் ... | 412 | 627 | 835 | 917 | 895 | 974 | 1,140 |
| ஏனைய வரியல்லா அரசிறை ... ... | 1,311 | 1,452 | 1,731 | 1,141 | 1,837 | 2,288 | 1,710 |
| மொத்த அரசிறை ... ... | 41,749 | 53,979 | 67,964 | 76,179 | 84,999 | 86,118 | 101,977 |

(தொடரும்)

## அட்டவணை 1.51 (தொடர்ச்சி)

### கூறுகளின்படி அரசிறைத் தொகுப்பு (மொ. உ. உ. இன் சதவீதமாக)

| விடயம் | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1992 தற்காலிகம் | 1993 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| வரி அரசிறை ... ... | 16.2 | 18.9 | 19.0 | 18.3 | 17.3 | 18.1 | 19.1 |
| வருமானவரிகள் ... ... | 2.1 | 2.0 | 2.3 | 2.6 | 2.1 | 2.7 | 2.5 |
| தனியார் ... ... | 0.7 | 0.9 | 0.9 | 0.9 | 0.8 | 1.1 | 0.9 |
| கூட்டு ... ... | 1.4 | 1.2 | 1.4 | 1.7 | 1.3 | 1.7 | 1.7 |
| சொத்துக்கள் மீதான வரிகள் ... ... | 0.8 | 1.1 | 1.0 | 1.0 | 0.7 | 0.7 | 0.7 |
| மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல் மீதான வரிகள் | — | 0.9 | 0.8 | 0.8 | 0.5 | 0.5 | 0.3 |
| உள்நாட்டு பொருட்கள் பண்டங்கள் மீதான வரிகள் .. | 7.7 | 8.3 | 8.9 | 8.6 | 8.8 | 9.2 | 10.6 |
| பொது விற்பனை, மொத்த விற்பனை வரி ... | 5.6 | 5.8 | 6.3 | 5.8 | 5.7 | 5.8 | 6.4 |
| தயாரிப்பு ... ... | 1.6 | 1.8 | 2.1 | 2.1 | 2.2 | 1.9 | 2.3 |
| தயாரிப்பல்லாத ... ... | 1.5 | 1.2 | 1.2 | 0.8 | 0.7 | 0.8 | 0.7 |
| இறக்குமதிகள் ... ... | 2.4 | 2.8 | 3.0 | 2.8 | 2.8 | 3.0 | 3.5 |
| கலால் வரி ... ... | 2.0 | 2.3 | 2.5 | 2.8 | 2.7 | 2.5 | 3.0 |
| குடிவகை ... ... | 0.8 | 0.8 | 0.8 | 0.8 | 0.8 | 0.9 | 0.9 |
| புகையிலை ... ... | 1.2 | 1.5 | 1.7 | 1.8 | 1.8 | 1.3 | 1.7 |
| ஏனையவை ... ... | — | — | — | 0.2 | 0.1 | 0.3 | 0.3 |
| பாதுகாப்பு வரி ... ... | — | — | — | — | 0.4 | 0.9 | 1.1 |
| உரிமக்கட்டணங்கள் ... ... | 0.1 | 0.1 | 0.1 | — | — | — | — |
| பன்னாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் ... | 5.6 | 6.5 | 6.0 | 5.3 | 5.1 | 5.1 | 5.0 |
| இறக்குமதிகள் ... ... | 4.8 | 5.9 | 5.2 | 5.0 | 4.7 | 4.9 | 4.8 |
| ஏற்றுமதிகள் ... ... | 0.8 | 0.6 | 0.8 | 0.3 | 0.4 | 0.2 | 0.2 |
| தேயிலை ... ... | 0.4 | 0.2 | 0.5 | 0.1 | 0.2 | 0.1 | 0.1 |
| இதில் பெறுமான விகித வரி... ... | 0.1 | 0.1 | 0.4 | 0.1 | 0.2 | 0.1 | 0.1 |
| இறப்பர் ... ... | 0.4 | 0.3 | 0.2 | 0.1 | 0.2 | 0.1 | 0.1 |
| தெங்கு ... ... | — | 0.1 | — | — | — | — | — |
| ஏனைய ஏற்றுமதிகள் ... ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| வரியல்லா அரசிறை ... ... | 2.6 | 2.6 | 2.1 | 2.2 | 1.9 | 2.2 | 1.5 |
| சொத்து வருவாய் ... ... | 1.8 | 1.7 | 1.3 | 1.6 | 1.3 | 1.5 | 1.0 |
| இதில் மத்திய வங்கி இலாபங்கள் ... | 0.7 | 0.8 | 0.2 | 0.1 | 0.1 | 0.3 | 0.2 |
| வட்டிவருவாய் ... ... | 0.7 | 0.5 | 0.4 | 0.7 | 0.6 | 0.8 | 0.7 |
| வர்த்தக முயற்சிகளின் மிகை ... | 0.4 | 0.4 | 0.7 | 0.7 | 0.5 | 0.3 | — |
| கட்டணங்களும் விதிப்புக்கட்டணங்களும் ... | 0.2 | 0.2 | 0.3 | 0.2 | 0.2 | 0.2 | 0.2 |
| ஏனைய வரியல்லா அரசிறை ... | 0.6 | 0.6 | 0.5 | 0.3 | 0.4 | 0.5 | 0.3 |
| மொத்த அரசிறை ... ... | 18.8 | 21.4 | 21.1 | 20.4 | 19.2 | 20.3 | 20.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வரிகளிலிருந்தான அரசிறை ரூ. 71,070 இலட்சத்திற்கு மேலும் உயர்வடைந்தது. இதற்கு ஆய்விற்குரிய ஆண்டில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் பிரிவு 20 'அ' வின் கீழ் பெரும் எண்ணிக்கையான கூட்டுநிலையங்கள் மற்றும் உயர்ந்தளவு கூட்டு இலாபங்கள் என்பனவற்றிற்கான வரி விடுப்பு ஒழிக்கப்பட்டமையே காரண மாகும்.

அதேவேளை நாணயக் கடிதத்தின் மீதான முத்திரைத் தீர்வை வீதம் 2.5 சதவீதத்திலிருந்து 1992 இல் 2 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமை மற்றும் ஆய்விற்குரிய ஆண்டில் செல்வ வரி ஒழிக்கப்பட்டமை என்பவற்றைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் முத்திரைத் தீர்வைகள் மற்றும் சொத்து மாற்றல்களி லிருந்தான அரசிறை 1991 இன் ரூ. 35,410 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 28,450 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அரசிறையின் புள்ளிவிபரத் தொகுப்பொன்று அட்டவணை 1.51 இல் தரப்பட்டுள்ளது.

**வெளிநாட்டுக் கொடைகள்**

1992 இல் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொடைகள் ரூ. 82,800 இலட்சமாக விளங்கி 5 சதவீதம்கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவு செய்தன. இதன் விளைவாக, மொ.உ. உற்பத்தி யுடன் தொடர்பான மொத்த வெளிநாட்டுக் கொடைகள் 1991 இன் 2.1 சத வீதத்திலிருந்து 1992 இல் 2.0 சதவீதத்திற்குக் குறைவுற்றன. செயற்றிட்டக் கொடைகள் மூலமாகப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொடைகள் ரூ. 60,020 இலட்சமாக அமைந்து கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொகையினைவிட 16 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. அதேவேளை பண்ட மற்றும் உணவு உதவிக் கொடைகள் ரூ. 22,780 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் இரு மடங்கு உயர்விற்கு எதிராக 1992 இல் 15 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டின. யப்பானும், ஐ.அ. நாடுகளும், இலங்கைக்கான மொத் தக் கொடைகளில் ஏறத்தாள 70 சதவீதத்தினை வழங்குகின்ற மிகப்பெரும் கொடையாளர்களாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. 1992 இல் யப்பானி னாலும் ஐ.அ. நாடுகளினாலும் வழங்கப்பட்ட கொடைகள் முறையே ரூ. 28,170 இலட்சமாகவும், ரூ. 13,360 இலட்சமாகவும் விளங்கின.

**செலவினம்**

1992 இல் மொத்தச் செலவினம் ரூ. 1,176,270 இலட்சமாக விளங்கி 1991 இனைவிட 2 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. நடைமுறைச் செலவினம் ரூ. 887,260 இலட்சமாக விளங்கி மொத்தச் செலவினத் தில் 75 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மிகுதி 25 சதவீதம் மூலதனச் செலவினத்தையும் தேறிய கடன் வழங்கலையும் உள்ளடக்கியிருந்தது. பொருட் கள் பணிகளின் கொள்வனவு மீதான நடைமுறைச் செலவுகள் நடைமுறைச் செலவினத்தில் 44 சதவீதத்தினைக் கொண்டிருந்த வேளையில் வட்டிக் கொடுப் பனவுகள் 28 சதவீதத்திற்கு வகை கூறின. அதேவேளை 1992 இல் அரச முதலீடு முன்னைய ஆண்டின் ரூ. 325,900 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 328,160 இலட்சமாக விளங்கியது. பெருமளவு முதலீட்டு நடவடிக்கைகள் வீதிகள், நீர் வழங்கல்கள் மற்றும் வடிகால், நீர்ப்பாசனம், காணி அபிவிருத்தி, கல்வி, நலம் போன்ற துறைகளில் செறிந்து காணப்பட்டன.

**நடைமுறைச் செலவினம்**

நடைமுறைச் செலவினம் ரூ. 887,260 இலட்சமாக அமைந்து 1991 இனைவிட 6 சதவீதங் கொண்ட மிதமான அதிகரிப்பினைப் பதிவு செய்ததுடன் முன்னைய ஆண்டின் 70 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இன் மொத்தச் செலவினத்தின் 75 சதவீதத்திற்கு வகை கூறியது. சம்பளங்கள், கூலிகள், ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் வடிவிலான பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவின் பேரிலான செலவினம் ரூ. 390,070 இலட்சமாக விளங்கி நடைமுறைச் செலவினத்தின் பெரும் தொகையை உள்ளடக்கியிருந்தது. 1992 இல் வட்டிக் கொடுப்பனவின் பேரிலான செலவு ரூ. 252,830 இலட்சமாக அமைந்து 1991 இனைவிட 15 சதவீதம் கொண்ட மிகக் கூடியளவு உயர்வைக் காட்டியதுடன் நடைமுறைச் செலவில் இதன் பங்கினை 1991 இன் 26 சத வீதத்திலிருந்து 1992 இல் 28 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை 1992 இல் குடியிருப்பாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான மாற்றல்கள் ரூ. 244,360 இலட்சமாக அமைந்து 5 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இதன்படி, நடைமுறைச் செலவினத்தில் அத்தகைய செலவுகளின் பங்கு 1991 இன் 31 சதவீதத்திலிருந்து 1992 இல் 28 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

சம்பளங்களும் கூலிகளும் ரூ. 202,460 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் செலவினமான ரூ. 179,850 இலட்சத்தினைவிட 13 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டின. மொத்த நடைமுறைச் செலவினத்தின் சதவீதமாகப் பார்க்கையில் சம்பளங்களும் கூலிகளும் 1991 இன் 21 சதவீதத்திலிருந்து 1992 இல் 23 சதவீதத்திற்குச் சிறிதளவு அதிகரித்தது. இதற்கு 1991 இன் ரூ. 63,760 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 76,200 இலட்சத்திற்கு 20 சத வீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்ந்த பாதுகாப்பு, ஆளணிக்கான தனிப் பட்ட ஊதியங்களில் ஏற்பட்ட உயர்ந்த செலவினமே காரணமாகும். அதேவேளை நடைமுறைச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட இறுக்க மான வழிமுறைகளையும், இறுக்கமான காசு முகாமைத்துவத்தையும் பிரதிபலிக் கின்ற விதத்தில் மின்வலு, தொடர்பூட்டல், வழங்கல் மற்றும் தேவைகள் என்பவற்றை உள்ளடக்கிய பல்வேறு பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வன வின் பொருட்டு அரசினால் ஏற்பட்ட செலவுகள் 1992 இல் ரூ. 187,620 இலட்சமாக விளங்கின. 1991 இல் அத்தகைய செலவுகள் மீதான மொத்தச் செலவினம் ரூ. 178,470 இலட்சமாக விளங்கியது. எனினும் மொ.உ. உற்பத்தி யின் விகிதமாகப் பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் 1991 இன் 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் 4.3 சதவீதத்தில் மட்டுப்படுத்தப் பட்டது.

வட்டிக் கொடுப்பனவுகளின் பேரிலான செலவினம் ரூ. 252,830 இலட்ச மாக அமைந்து 1991 இனைவிட 15 சதவீதத்தினால் உயர்வடைந்தது. உள் நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1991 இன் ரூ. 179,600 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 205,970 இலட்சத்திற்கு அதிகரித்தது. வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 15—17 சதவீத வீச்சில் வேறுபட்டமை, வெளிநின்ற பொறுப்புக்கள் 16 சதவீதத்தினால் உயர்வடைந்தமை என்பனவற்றின் காரண மாக நடுத்தர, நீண்டகால உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டி ரூ. 92,420 இலட்சமாக விளங்கி 1992 இல் 21 சதவீத உயர்வினைப் பதிவு செய்தது. அதேவேளை திறைசேரி உண்டியல்களின் பேரிலான வட்டிக் கொடுப்பனவுகள்

ரூ. 113,550 இலட்சமாக விளங்கி 9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தமைக்கு வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் அதிகரித்த அளவும் 1991 இல் ஆண்டிற்கு 16.33—17.43 சதவீத வீச்சிலிருந்து 1992 இல் ஆண்டிற்கு 17.67—18.99 சதவீத வீச்சிற்கு உயர்வடைந்த வருவாய்களின் பொதுவான உயர்ந்த மட்டமுமே காரணமாகும். அத்துடன், வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகளின் மீதான செலவினம் ரூ. 46,860 இலட்சமாக விளங்கி 1991 இன் 12 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 14 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. வெளிநாட்டுப் படுகடன் மீதான சராசரி வட்டி வீதம் 1992 இல் 2.2 சதவீதமாக அமைந்து இலங்கையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்பாடுகளின் சலுகை அடிப்படையிலான தன்மையைத் தொடர்ந்தும் பிரதிபலித்தது.

ஆய்விற்குரிய ஆண்டில் மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. 244,360 இலட்சமாக அமைந்து 5 சதவீத வீழ்ச்சியைக் காட்டின. மொ.உ. உற்பத்தியின் சதவீதமாகப் பார்க்கையில் அத்தகைய செலவினம் 1991 இன் 7 சதவீதத்திலிருந்து 1992 இல் 5.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ரூ. 7,910 இலட்சத்தினால் குறைவடைந்தமையும், பல்வகை நலன்புரி செலவின நிகழ்ச்சித் திட்டங்களின் மீதான செலவினம் ரூ. 8,430 இலட்சத்தினால் குறைவடைந்தமையுமே முக்கிய காரணங்களாகும். அரச முயற்சிகளை வர்த்தகமயமாக்குவதன் மீதான அரசின் கொள்கைத் திணிப்பு அதிகரித்து வருவதன் காரணமாகப் புகைவண்டிப் பகுதி, அஞ்சல் போன்றவற்றை உள்ளடக்கிய அத்தகைய முயற்சிகளுக்கான மாற்றல்கள் 1991 இன் ரூ. 20,090 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 16,700 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1990 இல் அரச ஊழியர்களைக் குறைக்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக 1991 இல் இரு மடங்காகிய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 1992 இல் 291,000 ஓய்வூதிய பெறுநர்களின் எண்ணிக்கையுடன் ரூ. 80,410 இலட்சமாக விளங்கிச் சிறிதளவு குறைந்த மட்டத்தைக் கொண்டிருந்தது. அதே வேளை உணவு மற்றும் மண்ணெண்ணெய் முத்திரைகள், மதிய உணவு, சனசக்தி என்பனவற்றை உள்ளடக்கிய சிறப்பு நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களின் பேரிலான செலவு ரூ. 83,060 இலட்சமாக அமைந்து 6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்குச் சனசக்தி மற்றும் மதிய உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான அதிகரித்த செலவே காரணமாகும். மேலும் பள்ளிச் சிறார்களின் இலவச சீருடை ஏற்பாட்டிற்காக 1992 இல் செலவிடப்பட்ட ரூ. 6,000 இலட்சம் கொண்ட தொகை வரவு செலவுத்திட்ட பொதுவான நலன்புரிச் செலவினை மேலும் அதிகரிக்கின்றது. இதனால் இச்சிறப்பு நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான செலவினம் 1992 இன் மொ.உ. உற்பத்தியில் 2 சதவீதத்திற்கு வகை கூறியது. அகதிகளின் செலவிற்கான ஏறத்தாள ரூ. 18,000 இலட்சத்தினை உள்ளடக்கிய ஏனைய குடியிருப்பாளர் மாற்றல்கள் மீதான செலவினம் ரூ. 33,450 இலட்சமாக விளங்கியது.

தொழிற்பாட்டு அடிப்படையில் கல்வி, நலம், நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற சமூகப் பணிகளின் ஏற்பாடுகளின் பொருட்டான நடைமுறைச் செலவினம் ரூ. 290,030 இலட்சமாக அமைந்து 1991 இன் மொ.உ. உற்பத்தியில் 8.4 சதவீதத்திலிருந்து 1992 இல் 6.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கல்வி மீதான செலவினம் ரூ. 76,570 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 12 சதவீத உயர்வினைக் கொண்டிருந்தவேளையில் நலத்துறைக்கு நெறிப்படுத்தப்பட்ட தொகை 1991 இன் ரூ. 41,100 இலட்சத்திலிருந்து

1992 இல் ரூ. 45,710 இலட்சத்திற்கு அதிகரித்தது. எனினும் மொத்த நலன்புரிச் செலவினம் ரூ. 166,200 இலட்சமாக அமைந்து 1991 இன் மொ.உ. உற்பத்தியின் 5 சதவீதத்திலிருந்து 1992 இன் 4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம், கடற்றொழில், வலு, நீர் வழங்கல், போக்குவரத்து, தொடர்பூட்டல்கள் போன்ற பொருளாதாரப் பணிகள் தொடர்பாக ஏற்பட்ட நடைமுறைச் செலவினம் பெரும்பாலும் 1991 இனைப் போன்று மொ.உ. உற்பத்தியில் 1 சதவீதத்தைக் கொண்டிருந்தது. எனினும் குடியியல் நிருவாகம், பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்புப் போன்ற பொது அரசப் பணிகளுக்காக வழிப்படுத்தப்பட்ட நடைமுறைச் செலவினம் முழுமையான நியதிகளில் 1991 இன் ரூ. 198,110 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 212,510 இலட்சத்திற்கு அதிகரித்தபோதும் மொ.உ. உற்பத்தியுடன் தொடர்பாக நோக்குகையில் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 5.3 சதவீதத்திலிருந்து 4.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும்**

1992 இல் மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் ரூ. 289,010 இலட்சமாகவிளங்கின. இது ரூ. 340,270இலட்சம் கொண்டஅரச முதலீடுகளையும் தனியார் மயமாக்கலிலிருந்தான பெறுகைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களினால் செய்யப்பட்ட கடன் மீளக் கொடுப்பனவுகள் என்பனவற்றின் பெருமளவு காரணமாக ரூ. 51,260 இலட்சங்களுக்குக் குறைவடைந்த அரச பொறுப்புக்களையும் உள்ளடக்கியிருந்தது. அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்ட நியதிகளில் நிலையான சொத்துக்களின் கட்டுமானம், அபிவிருத்தி என்பனவற்றில் அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினம் முன்னைய ஆண்டின் ரூ. 148,880 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 154,260 இலட்சமாக விளங்கியது. அத்தகைய பணிகளிலுள்ள மூலதனச் சொத்துக்களின் அபிவிருத்திக்காகக் கல்வி மற்றும் நலத்துறை அமைச்சுகளுக் கூடாக ரூ. 41,260 இலட்சம் கொண்ட தொகை வழிப்படுத்தப்பட்டது. பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்களின்மீது பொது நிருவாகம் மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சுக்களினால் ஏற்படுத்தப்பட்ட மொத்த மூலதனச் செலவு ரூ. 30,150 இலட்சமாக விளங்கியது.

மேலும், அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் செயற்றிட்ட நடைமுறைப் படுத்தல்களில் ஈடுபட்டிருந்த நியதிச் சபைகளுக்கும், அரச கூட்டுத்தாபனங்களுக்கும் வழங்கப்பட்ட மூலதன மாற்றல்கள் 1991 இன் ரூ. 98,300 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 123,630 இலட்சமாக விளங்கின. இம்மூலதன மாற்றல்களில் ரூ. 88,580 இலட்சம் கொண்ட தொகை வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை (ரூ. 29,980 இலட்சம்) தேசிய நீர் வழங்கல், வடிகால் சபை (ரூ. 27,690 இலட்சம்), மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபை (ரூ. 22,930 இலட்சம்) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (ரூ. 7,980 இலட்சம்) என்பனவற்றினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய அரச முதலீட்டுச் செயற்றிட்டங்களில் பயன் படுத்தப்பட்டது.

அரசின் கடன் வழங்கலிலிருந்து பெறப்பட்ட நிதியத்திலிருந்து அரச கூட்டுத்தாபனங்களினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினம் ரூ. 54,870 இலட்சமாக விளங்கியதுடன் இது 1992 இற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட தொகையைவிடக் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவாக

அட்டவணை 1.52

## செலவு, கடன் வழங்கல் என்பவற்றின் பொருளாதாரப் பகுப்பாய்வு

ப. இ. ரூபாய்களில்

| விடயம் | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1992 தற்காலிகம் | 1993 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவு** ... ... | **46,132** | **56,884** | **71,770** | **83,756** | **84,327** | **88,726** | **97,437** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவுகள் ... | 20,654 | 25,508 | 30,167 | 35,848 | 36,533 | 39,135 | 42,891 |
| சம்பளங்களும் கூலிகளும் ... | 10,016 | 14,446 | 15,748 | 17,985 | 19,437 | 20,839 | 23,185 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் ... | 10,638 | 11,062 | 14,419 | 17,863 | 17,096 | 18,296 | 19,706 |
| வட்டிக் கொடுப்பனவுகள் ... | 12,590 | 14,352 | 20,668 | 22,073 | 26,139 | 25,283 | 30,921 |
| வெளிநாட்டு ... | 2,896 | 3,337 | 3,678 | 4,113 | 4,261 | 4,686 | 4,602 |
| உள்நாட்டு ... | 9,694 | 11,015 | 16,990 | 17,960 | 21,878 | 20,597 | 26,319 |
| நடைமுறை மாற்றல்களும் உதவு தொகைகளும் ... | 12,888 | 17,024 | 20,935 | 25,835 | 22,893 | 24,308 | 25,640 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு ... | 1,569 | 2,283 | 2,639 | 1,743 | 1,083 | 1,722 | 1,472 |
| பொது நிறுவனங்களுக்கு ... | 1,377 | 1,696 | 1,811 | 1,405 | 1,723 | 1,479 | 1,912 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு ... | 918 | 902 | 1,237 | 1,050 | 1,099 | 1,103 | 1,123 |
| குடியிருப்புகளும் ஏனைய துறைகளும் ... | 9,024 | 12,143 | 15,249 | 21,637 | 18,988 | 20,004 | 21,133 |
| உணவு முத்திரை, உணவு உதவு தொகைபோன்றன ... | 1,895 | 3,932 | 5,122 | 4,023 | 4,175 | 4,536 | 4,275 |
| சனசக்தி ... | — | 705 | 2,912 | 3,407 | 4,500 | 3,572 | 5,150 |
| ஓய்வூதியங்கள் ... | 4,128 | 4,735 | 4,490 | 8,832 | 6,878 | 8,041 | 9,148 |
| வளமாக்கி உதவு தொகை ... | 600 | 796 | — | — | — | — | — |
| ஏனைய ... | 2,401 | 19,75 | 2,725 | 5,375 | 3,435 | 3,854 | 2,560 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு ... | — | — | — | — | — 1,238 | — | — 2,015 |
| **மூலதனச் செலவு** ... | **22,878** | **20,750** | **19,161** | **25,968** | **34,475** | **28,540** | **37,271** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு ... | 12,004 | 13,069 | 11,657 | 13,987 | 18,483 | 16,359 | 21,075 |
| மூலதன மாற்றல்கள் ... | 10,874 | 7,681 | 7,504 | 11,981 | 17,319 | 12,181 | 16,196 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு ... | 3,503 | 1,499 | 1,249 | 3,741 | 7,345 | 4,480 | 7,183 |
| பொது நிறுவனங்களுக்கு ... | 6,962 | 5,354 | 5,303 | 6,990 | 8,123 | 6,950 | 8,261 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு ... | 345 | 799 | 843 | 950 | 665 | 708 | 708 |
| ஏனையவை ... | 65 | 29 | 109 | 300 | 1,186 | 43 | 43 |
| கழிக்குக: குறைச்செலவுக்கான ஒதுக்கு ... | — | — | — | — | — 1,327 | — | — |
| தேறிய கடன் வழங்கல் ... | **7,522** | **4,530** | **8,882** | **9,803** | **5,208** | **361** | **7,209** |
| **இதில்:** முற்பணக் கணக்குகளின் கீழ் ... | 2,732 | — 993 | 1,699 | 1,819 | 250 | — 150 | 500 |
| மீளமைப்பின் தேறிய செலவு ... | — | — | — | 2,494 | — | — 2,365 | 100 |
| மொத்த செலவும் தேறிய கடன் வழங்கலும் ... | **76,532** | **82,164** | **99,814** | **119,527** | **124,010** | **117,627** | **141,916** |

(தொடரும்)

## அட்டவணை 1.52 (தொடர்ச்சி)

### செலவு கடன் வழங்கல் என்பவற்றின் பொருளாதாரப் பகுப்பாய்வு

(மொ. உ. உ. இன் சதவீதமாக)

| விடயம் | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப் பீடுகள் | 1992 தற்காலிக மானவை | 1993 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப் பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| **நடைமுறைச் செலவு** ... ... | **20.78** | **22.6** | **22.3** | **22.5** | **19,0** | **21.0** | **19.7** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு ... ... | 9.30 | 10.1 | 9.4 | 9.6 | 8.2 | 9.2 | 8.7 |
| சம்பளங்களும் கூலிகளும் ... ... | 4.51 | 5.7 | 4.9 | 4.8 | 4.4 | 4.9 | 4.7 |
| ஏனைய பொருட்களும் பணிகளும் ... ... | 4.79 | 4.4 | 4.5 | 4.8 | 3.9 | 4.3 | 4.0 |
| வட்டிக் கொடுப்பனவுகள் ... ... | 5.67 | 5.7 | 6.4 | 5.9 | 5.9 | 6.0 | 6.2 |
| வெளிநாட்டு ... ... | 1.30 | 1.3 | 1.1 | 1.1 | 1.0 | 1.1 | 0.9 |
| உள்நாட்டு ... ... | 4.37 | 4.4 | 5.3 | 4.8 | 4.9 | 4.9 | 5.3 |
| நடைமுறை மாற்றல்களும் உதவுதொகைகளும் ... ... | 5.81 | 6.8 | 6.5 | 6.9 | 5.2 | 5.7 | 5.2 |
| அரச கூட்டுத்தாபனங்கள் ... ... | 0.71 | 0.9 | 0.8 | 0.5 | 0.2 | 0.4 | 0.3 |
| பொது நிறுவனங்கள் ... ... | 0.62 | 0.7 | 0.6 | 0.4 | 0.4 | 0.4 | 0.4 |
| அரசின் ஏனைய மட்டங்கள் ... ... | 0.41 | 0.4 | 0.4 | 0.3 | 0.2 | 0.3 | 0.2 |
| குடியிருப்புகளும் ஏனைய துறைகளும் ... ... | 4.07 | 4.8 | 4.7 | 5.8 | 4.3 | 4.7 | 4.3 |
| உணவுமுத்திரையும் உணவு உதவுதொகைகளும் ... | 0.85 | 1.6 | 1.6 | 1.1 | 0.9 | 1.1 | 0.9 |
| சனசக்தி ... ... | — | 0.3 | 0.9 | 0.9 | 1.0 | 0.8 | 1.0 |
| ஓய்வூதியங்கள் ... ... | 1.86 | 1.9 | 1.4 | 2.4 | 1.6 | 1.9 | 1.8 |
| வளமாக்கி உதவு தொகை ... ... | 0.3 | 0.3 | — | — | — | — | — |
| ஏனைய ... ... | 1.08 | 0.8 | 0.8 | 1.4 | 0.8 | 0.9 | 0.5 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு ... ... | — | — | — | — | 0.3 | — | 0.4 |
| **மூலதனச் செலவு** ... ... | **10.31** | **8.2** | **6.0** | **7.0** | **7.8** | **6.7** | **7.5** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு ... ... | 5.41 | 5.2 | 3.6 | 3.8 | 4.2 | 3.9 | 4.3 |
| மூலதன மாற்றல்கள் ... ... | 4.90 | 3.0 | 2.3 | 3.2 | 3.9 | 2.9 | 3.3 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு ... ... | 1.58 | 0.6 | 0.4 | 1.0 | 1.7 | 1.1 | 1.5 |
| பொது நிறுவனங்களுக்கு ... ... | 3.14 | 2.1 | 1.7 | 1.9 | 1.8 | 1.6 | 1.7 |
| அரசின் ஏனைய மட்டங்களுக்கு ... ... | 0.16 | 0.3 | 0.3 | 0.3 | 0.2 | 0.2 | 0.1 |
| ஏனைய ... ... | 0.03 | — | — | 0.1 | 0.3 | — | — |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு ... ... | — | — | — | — | 0.3 | — | — |
| **தேறிய கடன் வழங்கல்** ... | **3.39** | **1.8** | **2.8** | **2.6** | **1.2** | **0.1** | **1.5** |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும் ...** | **34.48** | **32.6** | **31.0** | **2.1** | **28.0** | **27.8** | **28.7** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இருந்தது. இலங்கை மின் சபையின் முதலீடுகள் ரூ. 36,100 இலட்சம் கொண்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கிற்கு மாறாக ரூ. 23,410 இலட்சமாக அமைந்தமைக்குப் பல்வேறுபட்ட வலுச் செயற்றிட்டங்கள் தாமதமாக நடைமுறைப்படுத்தப் பட்டமையே காரணமாகும். இதே போன்று சிறிலங்கா ரெலிகொம்மின் முதலீடு ரூ. 15,720 இலட்சமாக விளங்கியதுடன் 1992 இல் மேற்கொள்ள எதிர்பார்க்கப் பட்ட முதலீட்டில் இது பெரும்பாலும் அரைப் பங்காகக் காணப்பட்டது. துறைமுக வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கைத் துறைமுக மேலாண்மைச் சபைக்கான கடன் வழங்கல் ரூ. 8,480 இலட்சமாக அமைந்து 1992 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 25 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. அதேவேளை அரசின் கடன் வழங்கல் நிதியின் பேரிலான மீள் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் ரூ. 11,320 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 26,330 இலட்சமாக விளங்கின. இலங்கை மின் சபையின் மீள் கொடுப்பனவுகள் ரூ. 10,430 இலட்சமாக விளங்கி மொத்தத்தில் ஏறத்தாள 40 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன.

ஆய்விற்குரிய ஆண்டில், அரச தொழில் முயற்சிகளைத் தனியார் மயமாக்கல் முன்னைய ஆண்டின் ரூ. 8,410 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 31,150 இலட்சத்தினை உருவாக்கியது. இவ்வாண்டில் சொத்துரிமை கைவிடப்பட்ட தொழில் முயற்சிகள் வரையறுக்கப்பட்ட ஆசிய கோட்டல் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட இலங்கை எண்ணெய் கொழுப்பு, வரையறுக்கப்பட்ட களனி டயர், வரையறுக்கப்பட்ட இலங்கை வடிசாலைக் கூட்டு நிலையம், வரையறுக்கப் பட்ட இலங்கை சிந்தட்டிக் வைபர் கூட்டு நிலையம், வரையறுக்கப்பட்ட வியாங்கொடை புடவை ஆலை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன, இதே வேளை அரசதுறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அமைப்புச் சீராக்க நியதிகளில் அரசிற்கு ஏற்பட்ட மீள் அமைப்புச் செலவுகள் ரூ. 7,500 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டில் ஏற்பட்ட ரூ. 33,550 இலட்சத்தினைவிடக் குறிப்பிடத்தக்களவு குறைவாக இருந்தது. இதனால் 1992 இல் மீள் அமைப்புச் செலவினைக் கழித்த தனியார்மயமாக்கல் பெறுகைகள் ரூ. 23,650 இலட்சமாக அமைந்து 1992 இல் அரச பற்றாக்குறையைக் குறைந்த அளவில் கட்டுப்படுத்துவதற்குச் சாதகமான முறையில் பங்களித்தது. அரச செலவினங்களின் பொருளாதாரப் பகுப்பாய்வு அட்டவணை 1.52 இல் தரப்பட்டுள்ளது.

மூலதனச் செலவினம் மற்றும் கடன் வழங்கலின் தொழிற்பாட்டுப் பகுப்பாய்வின்படி பொருளாதார உள்ளார்ந்த அமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கான அரசின் மொத்த முதலீடு ரூ. 245,890 இலட்சமாக விளங்கியது. மொ.உ. உற்பத்திக்குத் தொடர்பான பொருளாதார உள்ளார்ந்த அமைப்பின் மீதான முதலீட்டு விகிதம் 1991 இன் 6.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் 5.6 சதவீதமாகத் தொடர்ந்து இருந்தது. வலு, நீர் வழங்கல், போக்குவரத்து, தொடர்பூட்டல் துணைத் துறைகளின் அபிவிருத்திக்கான மூலதன முதலீடு தொடர்ந்தும் உயர்வாக விளங்கியதுடன் இவை 1992 இல் பொருளாதார உள்ளார்ந்த அமைப்பில் செய்யப்பட்ட மொத்த அரச முதலீட்

டில் ஏறத்தாள மூன்றில் இரண்டு பங்கினை ஈர்த்துக் கொண்டன. அதேவேளை கல்வி, நலத்துறை மற்றும் ஏனைய சமூகப் பணிகளின் உள்ளார்ந்த அமைப்பு வசதிகளின் ஏற்பாடுகளுக்கான அரச முதலீடு ரூ. 63,720 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட இரு மடங்கு அதிகரிப்பினைக் காட்டியது. இதன்படி, மொ.உ. உற்பத்தியின் விகிதமாகப் பார்க்கையில் அத்தகைய முதலீடுகள் 1991 இன் 0.8 சதவீதத்திலிருந்து 1992 இல் 1.5 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. பொது நிருவாகத்தின் மீதான மொத்த மூலதன முதலீடு ரூ. 30,730 இலட்சமாக அமைந்து மொ.உ. உற்பத்தியில் முன்னைய ஆண்டின் 0.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 0.7 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. அரச செலவினத்தின் தொழிற்பாட்டுப்பகுப்பின் புள்ளி விபரத் தொகுப்பினை அட்டவணை 1.53 தருகின்றது.

**வரவு செலவுத் திட்டக் குறையை நிதியிடல்**

1992 இல் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூ. 232,290 இலட்சமாக (கொடைகளுக்குப் பின்னர்) விளங்கி 1991 இன் பற்றாக்குறையினைவிட ரூ. 122,490 இலட்சம் கொண்ட மிகக்கூடிய வீழ்ச்சியைக் காட்டியது. இக் குறையினை நிதியிடுவதற்குச் சலுகை ரீதியான வெளிநாட்டுக் கடன்களினூடாக ரூ. 145,690 இலட்சம் கொண்ட தொகை திரட்டப்பட்டதுடன் இதில் ரூ. 16,800 இலட்சம் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அமைப்புச் சீராக்க நிகழ்ச்சித் திட்டத்திற்கான உதவியாக உலக வங்கியிலிருந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தும் நிகழ்ச்சித் திட்டக் கடன்களினூடாகப் பெறப்பட்டது. எனினும் ரூ. 65,770 இலட்சங் கொண்ட கடன் மீளக் கொடுப்பனவுகளுக்கு இடமளித்த பின்னர் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்கான தேறிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் இவ்வாண்டில் ரூ. 79,840 இலட்சமாக மட்டுமமைந்ததுடன் இது முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட அளவில் பெரும்பாலும் அரைப் பங்காக இருந்தது. இதன்படி மொத்தப் பற்றாக்குறை நிதியிடலில் அத்தகைய நிதியிடலின் பங்கு 1991 இன் 56 சதவீதத்திலிருந்து 1992 இல் 34 சதவீதத் திற்கு வீழ்ச்சியடைந்தது. 1992 இல் திரட்டப்பட்ட பெருந்தொகையான வெளிநாட்டுக் கடன்கள் செயற்றிட்டக் கடன்களின் வடிவிலிருந்ததுடன் பயன் படுத்தப்பட்ட தொகை மொத்த அடிப்படையில் ரூ. 128,890 இலட்சமாக இருந்தது.

ரூபாக் கடன்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் வழங்கல் மூலமாகவும் நிருவாக ஒழுங்குகளின் வாயிலாகவும் உள்நாட்டு மூலவளங்களிலிருந்து வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காகப் பெறப்பட்ட மொத்தக் கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ. 333,900 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 356,900 இலட்சமாக விளங்கின. ரூபாப் பிணைகளின் வழங்கல்கள் மூலம் திரட்டப்பட்ட ரூ. 209,190 இலட்சங் கொண்ட மொத்தக் கடன்பாடுகளில் ரூ. 202,810 இலட்சம் ஊழியர் சேமநிதியத்திலிருந்து பெறப்பட்டது. எனினும் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ. 179,410 இலட்சமாக அமைந்தமையின் காரணமாக ரூபாக் கடன்களினூடான தேறிய கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ. 131,030 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் ரூ. 29,790 இலட்சமாக மட்டும் காணப்பட்டது. அதேவேளை திறைசேரி உண்டியல்களின் வழங்கல் மூலமாகத் திரட்டப்பட்ட மூலவளங்கள் ரூ. 129,140 இலட்சமாக விளங்கின.

## அட்டவணை 1.53

## செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1992 தற்காலிகம் | 1993 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| நடைமுறைச் செலவு | | | | | | | |
| பொது அரச பணிகள் ... ... | 13,424 | 14,090 | 17,943 | 19,811 | 21.251 | 23,213 | 24,359 |
| பொது நிருவாகம் ... ... | 6,145 | 6,781 | 6,622 | 5,612 | 7,399 | 6,618 | 7,942 |
| பாதுகாப்பு ... ... | 4,732 | 4,073 | 6,736 | 10,317 | 10,148 | 12,136 | 12,312 |
| பொது ஒழுங்கும் பாதுகாப்பும் ... ... | 2,547 | 3,236 | 4,585 | 3,882 | 3,704 | 4,459 | 4,105 |
| சமூகப் பணிகள் ... ... | 15,475 | 19,976 | 24,449 | 31,594 | 31,067 | 29,003 | 34,809 |
| கல்வி ... ... | 5,371 | 6,612 | 8,529 | 7,951 | 8,908 | 7,657 | 10,725 |
| நலத்துறை ... ... | 2,427 | 3,381 | 3,685 | 4,110 | 4,125 | 4,571 | 5,318 |
| நலன்புரி ... ... | 7,490 | 9,750 | 11,973 | 19,266 | 16,790 | 16,620 | 17,786 |
| வீடமைப்பு ... ... | 15 | 17 | — | — | — | — | — |
| சமூகப் பணிகள் ... ... | 173 | 216 | 262 | 267 | 1,154 | 154 | 980 |
| பொருளாதாரப் பணிகள் ... ... | 4,306 | 4,579 | 5,138 | 3,925 | 3,943 | 1,661 | 4,882 |
| வேளாண்மையும் நீர்ப்பாசனமும் ... ... | 1,412 | 976 | 982 | 912 | 973 | 579 | 1,332 |
| கடற்றொழில் ... ... | 40 | 47 | 46 | 98 | 49 | 51 | 806 |
| தயாரிப்பும் சுரங்கமகழ்தலும் ... ... | 197 | 408 | 181 | 231 | 434 | 188 | 288 |
| வலுவும் நீர்வழங்கலும் ... ... | 83 | 416 | 345 | 659 | 206 | 133 | 289 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் ... | 1,613 | 1,138 | 2,600 | 1,308 | 1,226 | 129 | 1,355 |
| வியாபாரமும் வர்த்தகமும் ... ... | 430 | 950 | 159 | 137 | 341 | 136 | 163 |
| ஏனையவை ... ... | 532 | 645 | 824 | 580 | 715 | 446 | 650 |
| ஏனையவை ... ... | 12,927 | 18,240 | 24,241 | 28,425 | 29,304 | 34,849 | 35,403 |
| இதில் வட்டி ... ... | 12,590 | 14,352 | 20,668 | 22,073 | 26,139 | 25,283 | 30,921 |
| குறைச் செலவுக்கான ஒதுக்கு ... ... | — | — | — | — | — 1,238 | — | — 2,015 |
| மொத்தம் ... ... | 46,132 | 56,884 | 71,770 | 83,756 | 84,327 | 88,726 | 97,437 |

(தொடரும்)

## அட்டவணை 1.53 (தொடர்ச்சி)

## செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1992 தற்காலிகம் | 1993 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| மூலதனச் செலவும் கடன் வழங்கலும் | | | | | | | |
| பொது அரச பணிகள் ... ... | 2,772 | 2,503 | 3,617 | 2,422 | 3,090 | 3,073 | 3,543 |
| பொது நிருவாகம் ... ... | 2,133 | 2,002 | 1,599 | 1,680 | 2,362 | 2,374 | 2,804 |
| பொது ஒழுங்கும் பாதுகாப்பும் ... ... | 639 | 501 | 2,018 | 742 | 728 | 699 | 739 |
| சமூகப் பணிகள் ... ... | 3,198 | 3,667 | 3,019 | 2,964 | 5,022 | 6,372 | 7,730 |
| கல்வி ... ... | 1,014 | 1,529 | 1,042 | 1,178 | 2,411 | 2,007 | 3,057 |
| நலத்துறை ... ... | 1,504 | 1,258 | 1,279 | 1,119 | 1,429 | 2,020 | 2,271 |
| நலன்புரி ... ... | 13 | 10 | 25 | 15 | 43 | 1,187 | 1,348 |
| வீடமைப்பு ... ... | 579 | 787 | 513 | 535 | 993 | 990 | 854 |
| சமூகப் பணிகள் ... ... | 88 | 83 | 160 | 117 | 147 | 168 | 200 |
| பொருளாதாரப் பணிகள் ... ... | 21,591 | 19,653 | 19,167 | 26,854 | 31,407 | 22,084 | 33,015 |
| வேளாண்மையும் நீர்ப்பாசனமும் ... ... | 6,526 | 5,234 | 5,215 | 6,071 | 9,188 | 5,361 | 6,723 |
| இதில்: மகாவலி செயற்றிட்டம் ... ... | 3,430 | 2,475 | 1,810 | 2,410 | 2,712 | 2,293 | 2,676 |
| கடற்றொழில் ... ... | 140 | 283 | 133 | 181 | 198 | 95 | 286 |
| தயாரிப்பும் சுரங்கமகழ்தலும் ... ... | 330 | 471 | 120 | 171 | 187 | 144 | 127 |
| வலுவும் நீர்வழங்கலும் ... ... | 5,461 | 4,719 | 6,500 | 6,267 | 7,689 | 5,672 | 9,031 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் ... ... | 6,264 | 6,666 | 4,319 | 11,669 | 10,620 | 7,766 | 10,325 |
| வியாபாரமும் வர்த்தகமும் ... ... | 120 | 50 | 205 | 218 | 406 | 363 | 366 |
| ஏனையவை ... ... | 2,751 | 2,230 | 2,674 | 2,277 | 3,119 | 2,683 | 6,157 |
| ஏனையவை ... ... | 410 | 828 | 952 | 1,250 | 524 | 751 | 1,043 |
| மொத்த மூலதனச் செலவும் கடன் வழங்கலும் ... ... | 27,971 | 26,651 | 26,755 | 33,491 | 40,043 | 32,280 | 45,331 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.


1992 இல் தேசிய சேமிப்பு வங்கி ரூ. 93,580 இலட்சத்தினை முதலீடு செய்தமையின்மூலம் திறைசேரி உண்டியல்களுக்கான மிகப்பெரும் உதவுநராக மாறியது. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதில் அரசு, நிருவாக ஒழுங்குகளினூடாகத் தே.சே. வங்கியிலிருந்து பெற்ற ரூ. 18,570 இலட்சம் கொண்ட தொகையையும் பயன்படுத்தியது. இதன்படி வங்கியல்லா மூலங்களிலிருந்து பெறப்பட்ட ரூ. 153,020 இலட்சம் கொண்ட மொத்தத் தேறிய உள்நாட்டுக் கடன்பாடுகளில் ஏறத்தாழ 90 சதவீதம் அரச ஆவணங்களுக்கு உதவுகின்ற அரசின் செல்வாக்கிற்குட்பட்ட மரபு ரீதியான மூலங்களாக விளங்கும் தேசிய சேமிப்பு வங்கி மற்றும் ஊ.சே. நிதியம் என்பவற்றிலிருந்து கிடைத்தன.

வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதில் வங்கித்தொழில் முறையிலிருந்தான தேறிய கடன்பாடுகள் 1992 இல் மேலும் வீழ்ச்சியைக் காட்டின. ரூ. 14,840 இலட்சம் கொண்ட மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்களினூடான மூலவளங்களின் பாவனை, அரசின் வைப்பு நிலுவைகளில் செய்யப்பட்ட ரூ. 63,620 இலட்சம் கொண்ட குறைப்பு என்பவற்றின் மத்தியிலும் மத்திய வங்கியிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 18,940 இலட்சத்தினால் குறைவடைந்தமைக்கு மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்கள் உடைமையில் ஏற்பட்ட ரூ. 80,620 இலட்சம் கொண்ட கடுமையான குறைப்பும் சேகரிப்பு நிலையில் உள்ள காசு விடயங்களில் ஏற்பட்ட ரூ. 16,790 இலட்சம் கொண்ட மேலுமொரு வீழ்ச்சியும் காரணங்களாக அமைந்தன. இதே வேளை வர்த்தக வங்கிகள் வசமிருந்த திறைசேரி உண்டியல் உடைமைகளும் அரச பிணைகளும் ரூ. 9,220 இலட்சத்தினால் அதிகரித்தபோதிலும் வர்த்தக வங்கிகளிடமிருந்தான மொத்தத் தேறிய கொடுகடன் ரூ. 4,270 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது வைப்பு நிலுவைகள் அதிகரித்தமையினாலும் இறக்குமதி உண்டியல்களின் உடைமைகள் மற்றும் சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள் என்பன குறைவடைந்தமையினாலும் ஏற்பட்டதாகும். இதன் விளைவாக 1992 இன் பொதுவான இறைத் தொழிற்பாடுகள் வங்கித்தொழில் முறையிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடனில் ரூ. 23,210 இலட்சங் கொண்ட குறைப்பை ஏற்படுத்தின.

**அரச படுகடன்**

1992 இறுதியில் அரசின் படுகடன் ரூ. 4,048,630 இலட்சமாக அமைந்து 1991 இன் படுகடன் தொகையினைவிட 10 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. உள்நாட்டுப் படுகடன் ரூ. 1,700,130 இலட்சமாக அமைந்து மொத்தப் படுகடனில் 42 சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் 12 சதவீத அதிகரிப்பையும் காட்டியது. வரவு செலவுத் திட்டக் குறையை நிதியிடுவதற்குத் தேவையான நிதியத்தைப் பெறுவதற்குத் திறைசேரி உண்டியல்கள் மீது பெருமளவிற்குத் தங்கியிருந்தமையைப் பிரதிபலிக்கும் வகையில் குறுங்காலப் படுகடன் ரூ. 979,240 இலட்சமாக அமைந்து 16 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது மொத்தஉள்நாட்டுப் படுகடனில் குறுங்காலப் படுகடனின் பங்கினை ஏறத்தாழ 60 சதவீதத்திற்கு உயர்த்துவதற்குக் காரணமாயிற்று. வங்கியல்லாத்துறை வசமிருந்த படுகடன் ரூ. 1,115,430 இலட்சமாக அமைந்து உள்நாட்டுப் படுகடனில் 66 சதவீதத்திற்கு வகை கூறியது. இதேவேளை வெளிநாட்டுப் படுகடன் ரூ. 2,348,500 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் 21 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 9 சதவீதமான மிதமான அதிகரிப்பைக் காட்டியது. செயற்றிட்டக் கடன்கள் மொத்தமாக ரூ. 1,848,860

## அரச படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி.

* கடன்கழிப்பு நிதியங்கள் நீங்கலாக அரச மொத்தப் படுகடன்.

அட்டவணை 1.54

## மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (கால முடிவில்)

ரூபா பத்து இலட்சம்

| | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| **மொத்த உள்நாட்டுப் படுகடன் ...** | **98,596** | **117,562** | **133,896** | **152,118** | 170,013 |
| குறுகிய கால ... | 48,626 | 63,146 | 74,376 | 84,503 | 97,924 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 43,700 | 57,246 | 67,968 | 72,968 | 84,996 |
| ரூபாப் பிணைகள் ... | — | — | — | 4,000 | 4,000 |
| ஏனையவை ... | 4,926 | 5,900 | 6,408 | 7,535 | 8,928 |
| நடுத்தர நீண்ட கால ... | 49,970 | 54,417 | 59,413 | 67,615 | 72,096 |
| ரூபாப் பிணைகள் ... | 49,797 | 54,217 | 54,677 | 62,824 | 65,180 |
| திறைசேரி உண்டியல்கள் ... | — | — | — | — | 2,100 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் ... | — | — | 4,532 | 4,532 | 4,532 |
| ஏனையவை ... | 173 | 200 | 204 | 259 | 284 |
| படுகடன் கருவிகளின்படி | | | | | |
| ரூபாப் பிணைகள் ... | 49,797 | 54,217 | 54,677 | 66,824 | 69,180 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 43,700 | 57,246 | 67,968 | 72,968 | 87,096 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் ... | — | — | 4,532 | 4,532 | 4,532 |
| திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் ... | — | — | 109 | 153 | 102 |
| ஏனையவை ... | 5,099 | 6,100 | 6,611 | 7,641 | 9,103 |
| நிறுவனங்களின்படி ... | 98,596 | 117,562 | 133,896 | 152,118 | 170,013 |
| வங்கிகள் ... | 42,347 | 46,874 | 48,254 | 52,146 | 58,111 |
| மத்திய வங்கி | | | | | |
| படுகடன் கருவிகளின்படி ... | 38,228 | 40,025 | 37,080 | 42,487 | 34,932 |
| ரூபாக் கடன்கள் ... | 32 | 27 | 18 | 11 | 6 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 33,270 | 34,098 | 30,654 | 35,032 | 25,998 |
| முற்பணங்கள் ... | 4,926 | 5,900 | 6,408 | 7,444 | 8,928 |
| வர்த்தக வங்கி | | | | | |
| படுகடன் கருவிகளின்படி ... | 4,120 | 6,849 | 11,175 | 9,659 | 23,179 |
| ரூபாக் கடன்கள் ... | 594 | 566 | 565 | 414 | 413 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 3,525 | 6,282 | 10,604 | 9,239 | 22,760 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் ... | — | — | 5 | 5 | 5 |
| ஏனையவை ... | 1 | 1 | 1 | 1 | 1 |
| நிறுவனங்களின்படி ... | 4,120 | 6,849 | 11,175 | 9,659 | 23,178 |
| இலங்கை வங்கி ... | 1,030 | 1,707 | 6,841 | 6,791 | 15,753 |
| மக்கள் வங்கி ... | 1,894 | 3,265 | 2,062 | 2,182 | 2.938 |
| ஏனையவை ... | 1,196 | 1,877 | 2,272 | 686 | 4,487 |

(தொடரும்)

அட்டவணை 1.54 (தொடர்ச்சி)


## மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (கால முடிவில்)

ரூபா பத்து இலட்சம்

| | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| கடன்கரைப்பு நிதியம் ... | 2,832 | 2,289 | 1,662 | 840 | 359 |
| ரூபாக் கடன்கள் ... | 2,832 | 2,289 | 1,662 | 840 | 359 |
| திறைசேரி உண்டியல்கள் ... | — | — | — | — | — |
| ஏனையவை ... | — | — | — | — | — |
| வங்கியல்லாத் துறை | | | | | |
| படுகடன் கருவிகளின்படி ... | 53,416 | 68,399 | 83,981 | 99,132 | 111,543 |
| ரூபாக் கடன்கள் ... | 46,339 | 51,335 | 52,433 | 65,559 | 68,402 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 6,906 | 16,865 | 26,710 | 28,697 | 38,338 |
| தேசிய பாதுகாப்பு முறிகள் ... | — | — | 4,527 | 4,527 | 4,527 |
| திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் | — | — | 109 | 153 | 102 |
| ஏனையவை ... | 172 | 199 | 202 | 196 | 174 |
| நிறுவனங்களின்படி ... | 53,416 | 68,399 | 83,981 | 99,132 | 111,550 |
| தேசிய சேமிப்பு வங்கி ... | 17,952 | 18,960 | 24,190 | 26,659 | 30,882 |
| சேமிப்பு நிறுவனமும் தனிப்பட்டோரும் | 6,081 | 15,175 | 20,960 | 23,629 | 22,522 |
| ஊழியர் சேம நிதியம் ... | 25,816 | 31,648 | 36,851 | 45,862 | 54,563 |
| காப்புறுதி, நிதி நிறுவனங்கள் ... | 3,289 | 2,387 | 1,742 | 2,758 | 3,409 |
| ஏனையவை ... | 278 | 229 | 238 | 224 | 174 |
| திணைக்கள, அலுவல்சார் நிதி ... | 115 | 39 | 44 | 34 | — |
| வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகள் | 163 | 190 | 195 | 190 | 174 |
| மொத்த வெளிநாட்டுப் படுகடன் ... | 125,657 | 156,298 | 176,883 | 214,579 | 234,850 |
| வகைகளின்படி | | | | | |
| செயற்றிட்டக் கடன்கள் ... | 85,745 | 113,120 | 132,338 | 166,149 | 184,886 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் ... | 39,912 | 43,178 | 44,545 | 48,430 | 49,964 |
| பண்டக் கடன்கள் ... | 35,886 | 41,117 | 43,393 | 46,037 | 47,978 |
| ஏனையவை ... | 4,026 | 2,061 | 1,152 | 2,393 | 1,986 |
| நிறுவனங்களின்படி | | | | | |
| சலுகை அடிப்படையிலான கடன்கள் ... | 115,288 | 146,144 | 166,202 | 202,555 | 224,492 |
| பல்புடை ... | 36,409 | 48,698 | 59,526 | 78,084 | 91,167 |
| இருபுடை ... | 78,879 | 97,446 | 106,677 | 124,471 | 133,325 |
| வர்த்தகக் கடன்கள் ... | 10,369 | 10,154 | 10,680 | 12,024 | 10,358 |
| வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடன் ... | 340 | 333 | 107 | 1,260 | — |
| மொத்த வெளிநின்ற அரச படுகடன் ... | **224,253** | **273,860** | **310,779** | **366,697** | 404,863 |
| கடன் கரைப்பு நிதியம் நீங்கலான வெளிநின்ற மொத்த அரச படுகடன் ... | **220,059** | **270,609** | **308,412** | **365,857** | 404,504 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி.

* கடன்களைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்த உள்நாட்டுப் படுகடன்

இலட்சமாக அமைந்து வெளிநாட்டுப் படுகடனில் ஏறத்தாழ 80 சதவீதத்திற்கு வகை கூறின. அரச படுகடனின் மீதான புள்ளிவிபரத் தொகுப்பு அட்டவணை 1.54 இல் தரப்பட்டுள்ளது.

**உள்நாட்டுப் படுகடன்**

ரூ. 1,700,130 இலட்சமாக அமைந்த உள்நாட்டுப் படுகடன் 1991 இன் 14 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1992 இல் 12 சதவீதம் அதிகமான தாகும். குறுங்காலப் படுகடன் (ஒரு வருடத்திற்குக் குறைவான முதிர்ச்சியைக் கொண்டவை) ரூ. 979,240 இலட்சமாக அமைந்து 1991 இனைவிட 16 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. வரவு செலவுத் திட்டத் தொழிற்பாடுகளுக்கான நிதியைப் பெறுவதற்குத் திறைசேரி உண்டியல்களில் அதிகரித்த அளவில் தங்கி யிருக்க வேண்டியிருந்தமையினால் திறைசேரி உண்டியல்களின் பேரில் வெளிநின்ற படுகடன் 1992 இல் ரூ. 870,960 இலட்சமாக அமைந்து ரூ. 141,280 இலட்சம் கொண்ட புதிய வழங்கல்களைப் பிரதிபலித்தது.

வங்கித்தொழில் துறையின் திறைசேரி உண்டியல் உடைமைகள் ரூ. 44,870 இலட்சத்தினால் அதிகரித்து 1992 இறுதியில் ரூ. 487,580 இலட்சமாக விளங்கின. இது முற்றாக வர்த்தக வங்கிகளின் உடைமைகள் 1991 இன் ரூ. 92,330 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 227,600 இலட்சத்திற்கு அதிகரித்தமையினால் ஏற்பட்டதாகும். இதேவேளை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் முந்திய ஆண்டின் ரூ. 350,320 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 259,980 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக வெளிநின்ற மொத்தத் திறைசேரி உண்டியல்களில் வங்கித்தொழில் முறையின் மொத்தத் திறைசேரி உண்டியல் உடைமைகள் முந்திய ஆண்டின் 61 சதவீதத் துடன் ஒப்பிடுகையில் 1992 இறுதியில் 56 சதவீதத்திற்கு வகை கூறின. இதே வேளை வங்கியல்லாத்துறை அதன் திறைசேரி உண்டியல்களின் இருப்பினை 1991 இன் ரூ. 286,970 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 383,380 இலட்சத் திற்கு இவ்வாண்டில் ரூ. 96,410 இலட்சத்தினால் உயர்த்தியது. இதனால் இத்துறை வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் பங்கு 39 சதவீதத்திலிருந்து 44 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. தேசிய சேமிப்பு வங்கி ரூ. 166,450 இலட்சம் கொண்ட மொத்த முதலீட்டுடன் திறைசேரி உண்டியல்களுக்கான வங்கியல்லாத்துறையின் தனிப்பெரும் உதவுநராகத் தொடர்ந்து விளங்கியது.

திறைசேரி உண்டியல்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு ரூ. 141,280 இலட்சத்தினால் அதிகரித்தபோதிலும் திறைசேரி உண்டியல்கள் மூலம் பெறப் பட்ட குறுங்காலப் படுகடன் ரூ. 120,280 இலட்சத்தினால் மட்டும் உயர் வடைந்தமைக்கு இவ்வாண்டில் நீண்டகால திறைசேரி உண்டியல்கள் வழங்கப் பட்டமையே காரணமாகும். எனினும் மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங் களில் ஏற்பட்ட ரூ. 14,840 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் மொத்தக் குறுங்காலப் படுகடன் ரூ. 134,210 இலட்சத்தினால் அதிகரித்து 1992 இறுதியில் ரூ. 979,240 இலட்சமாக விளங்கியது.

நடுத்தர, நீண்டகால உள்நாட்டுப் படுகடன் 1992 இறுதியில் ரூ. 720,960 இலட்சமாக அமைந்து 1991 இனைவிட 7 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது ரூபாப் பிணைகளின் பேரிலான ரூ. 23,560 இலட்சம் கொண்ட அதிகரிப்பினதும் திறைசேரி உண்டியல்களின் பேரிலான ரூ. 21,000

இலட்சம் கொண்ட உயர்வினதும் இணைந்த விளைவாக ஏற்பட்டதாகும். நீண்டகாலப் படுகடன் கருவிகளுக்கான சந்தையினை ஊக்குவிக்கும் நோக்குடன் 1992 இல் நீண்டகால திறைசேரி உண்டியல்களின் வழங்கல் (1 வருடத்திற்கு மேற்பட்ட முதிர்ச்சி கொண்டவை) ஆரம்பிக்கப்பட்டது.


ரூபாப் பிணைகளின் பேரிலான வெளிநின்ற படுகடன் 1992 இல் ரூ. 691,800 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த வளர்ச்சியான 22 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. ஊழியர் சேம நிதியம் தொடர்ந்தும் ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கான முக்கிய உதவுநராக விளங்கி ரூபாப் பிணைகளிலான அதன் மொத்த முதலீட்டை 1991 இறுதியின் ரூ. 426,070 இலட்சத்திலிருந்து 1992 இறுதியில் ரூ. 512,080 இலட்சத்திற்கு உயர்த்தியது.

**வெளிநாட்டுப் படுகடன்**

வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ. 2,348,500 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டைவிட ரூ. 202,710 இலட்சம் அல்லது 9 சதவீதமான அதிகரிப்பைக் காட்டியது. வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 79,840 இலட்சம் கொண்ட தேறிய கடன் பெறுகைகளையும் இவ்வாண்டின் செலாவணிவீத வேறுபாடுகள் காரணமாக வெளிநின்ற படுகடனில் ஏற்பட்ட ரூ. 122,890 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் உள்ளடக்கியிருந்தது. சலுகைக் கடன்கள் ரூ. 2,244,920 இலட்சமாக அமைந்து வெளிநாட்டுப் படுகடனில் 1991 இன் 94 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 96 சதவீதத்திற்கு வகை கூறியது. இதேவேளை வர்த்தகக் கடன்களின் மீதான வெளிநின்ற பொறுப்புக்கள் ரூ. 103,580 இலட்சமாக விளங்கி 1991 இனைவிட 14 சதவீத குறைப்பினைப் பிரதிபலித்ததுடன் மொத்த வெளிநாட்டுப் படுகடனின் 3 சதவீதத்திற்கு வகை கூறியது. இருபுடைக் கடன்கள் ரூ. 1,333,250 இலட்சமாக அமைந்து 1992 இறுதியில் சலுகை ரீதியிலான கடன்களில் 59 சதவீதத்தினைக் கொண்டிருந்தன. ஒப்பிடுகையில் 1991 இல் இது 61 சதவீதமாக இருந்தது.

செயற்றிட்டக் கடன்களின் பேரிலான பொறுப்புக்கள் 1992 இறுதியில் ரூ. 1,848,860 இலட்சமாக அமைந்து ரூ. 88,780 இலட்சம் கொண்ட தேறிய கடன்பாட்டினையும் செலாவணிவீத வேறுபாடுகளின் பேரிலான ரூ. 98,590 இலட்சம் கொண்ட மேலதிகப் பொறுப்பினையும் பிரதிபலித்தது. அதேவேளை செயற்றிட்டமல்லாக் கடன்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்பு 1991 இறுதியின் ரூ. 484,300 இலட்சத்திலிருந்து ரூ. 499,560 இலட்சத்திற்கு உயர்வடைந்து ரூ. 15,260 இலட்சம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. வெளிநாட்டுப் படுகடன் மீதான செலாவணிவீத மாறுபாடுகளின் தாக்கத்தினை அட்டவணை 1.55 தருகின்றது.

## வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.55

### வெளிநாட்டுக் கடன்கள் மீதான செலாவணி வீதத் தளம்பல்களின் தாக்கம் 1988—1992 (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| 1. மொத்த வரவுகள் ... ... | 12,975.3 | 12,002.8 | 16,549.6 | 25,969.1 | 14,569.0 |
| 2. மீளக் கொடுப்பனவுகள் ... ... | 5,197.2 | 5,675.4 | 4,845.7 | 4,881.0 | 6,585.0 |
| 3. தேறிய வரவுகள் ... ... | 7,778.1 | 6,327.4 | 12,098.9 | 21,088.0 | 7,984.0 |
| 4. செலாவணி வீதத் தளம்பலினால் பொறுப்பில் ஏற்பட்ட மாற்றம் ... | 5,438.0 | 23,258.8 | 8,486.3 | 16,608.0 | 12,289.0 |
| 5. காலப் பகுதி முடிவில் உள்ள பொறுப்பு ... | 125,656.9 | 156,297.5 | 176,882.7 | 214,578.5 | 234,851.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தரவுகள் பதிவுசெய்யப்படும் நாளிலுள்ள பெறுமதி முறையை அடிப்படையாகக் கொண்டவை.

**அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்**

1992 இல் கடன் தீர்ப்பனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய அரசின் மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ. 500,270 இலட்சமாக அமைந்து 1991 இனைவிட 26 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. இதன்படி மொ.உ.உ. இன் விகிதாசாரமாகப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1991 இன் 10.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் 11.8 சதவீதத்தினை அடைந்தன. கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ. 247,080 இலட்சமாக அமைந்து மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவில் 49 சதவீதத்தைக் கொண்டிருந்த வேளையில் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 253,190 இலட்சமாக அமைந்து மீதித் தொகையைக் கொண்டிருந்தன. பெருந்தொகையான நடுத்தர நீண்டகாலக் கடன்கள் 1992 இல் முதிர்ச்சியடைவதனால் உள்நாட்டுப் படுகடன் பேரிலான கடன் தீர்ப்பனவுகள் ரூ. 181,230 இலட்சமாக விளங்கி 1991 இனைவிட 40 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தன. இதேவேளை வெளிநாட்டுப் படுகடன் பேரிலான அத்தகைய கொடுப்பனவுகள் 1991 இன் ரூ. 48,810 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 65,850 இலட்சத்திற்கு அதிகரித்தன. அதிகரித்த வட்டி வீதங்களையும் குறுங்கால உள்நாட்டுப் படுகடனின் அதிகரித்த அளவையும் பிரதிபலிக்கும் வகையில் அத்தகைய படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 113,550 இலட்சமாக அமைந்து 9 சதவீத அதிகரிப்பைக் காட்டின. இவ்வாறே நடுத்தர, நீண்டகாலப் படுகடன்மீது நிலவிய உயர்ந்த வட்டி வீதங்களும் அத்தகைய படுகடனின் அளவும் மேலும் அதிகரித்தமை காரணமாக வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 92,780 இலட்சமாக அமைந்து 23 சதவீத அதிகரிப்பைக் காட்டின. இதேவேளை வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1992 இல் 14 சதவீதத்தால் உயர்வடைந்து ரூ. 46,860 இலட்சமாக விளங்கின. அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் புள்ளிவிபரத் தொகுப்பு அட்டவணை 1.56 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 1.56

## அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் — (1988—1992)

ப. இ. ரூபாய்களில்

| விடயம் | | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|---|
| படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | ... | 22,270 | 23,890 | 32,878 | 39,855 | 50,027 |
| (i) கடன் தீர்ப்பனவுகள் | ... | 9,680 | 9,538 | 12,210 | 17,782 | 24,708 |
| (அ) உள்நாட்டு (நடுத்தர, நீண்டகால) | ... | 4,471 | 3,796 | 7,304 | 12,901 | 18,123 |
| (ஆ) வெளிநாட்டு | ... | 5,209 | 5,742 | 4,906 | 4,881 | 6,585 |
| (ii) வட்டிக் கொடுப்பனவுகள் | ... | 12,590 | 14,352 | 20,668 | 22,073 | 25,319 |
| (அ) உள்நாட்டு | ... | 9,694 | 11,015 | 16,990 | 17,960 | 20,633 |
| குறுங்காலம் | ... | 4,198 | 5,075 | 9,563 | 10,410 | 11,355 |
| நடுத்தர, நீண்டகாலம் | ... | 5,496 | 5,940 | 7,427 | 7,550 | 9,278 |
| (ஆ) வெளிநாட்டு | ... | 2,896 | 3,337 | 3,678 | 4,113 | 4,686 |
| வட்டி/நடைமுறைச் செலவு (%) | ... | 27.3 | 25.2 | 28.8 | 26.4 | 29.1 |
| படுகடன் பணி/ மொ. உ. உ. (%) | ... | 10.0 | 9.5 | 10.2 | 10.6 | 11.8 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.